# 'கச்சதீவு சுதந்திரத்திற்கு முன்னரே இந்தியாவுக்கு சொந்தம்'

Registered as a News paper in Ceylon   விலை சதம் 15 ★★

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49   மலர் 11
போன்: 389   National Tamil Daily   இதழ்: 10   தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 9 ஜு ஹஜ்: 2 வியாழக்கிழமை [20-2-69

விற்பனையாகிறது! தனிப்பிரதி ரூ.1 - 25சதம்

**திரைவாணி**

[புதுமையான சினிமா மாத இதழ்]

M. G. R., A.L. ராகவன், சுந்தரராஜன்,
சரோஜாதேவி, ஜெயலலிதா, புஷ்பலதா
ஆகியோரின் கட்டுரைகளுடன்
சினிமா செய்திகள், கேள்விபதில்,
ஏராளமான பெரிய வர்ணப்படங்கள்
சரோஜாதேவியின்
பெரிய வர்ணப்படத்துடன்
1969-ம் ஆண்டு கலண்டரும்.
இலங்கை எங்கும் சப் ஏஜண்டுகள் தேவை.

**தமிழ்ப்பண்ணை புத்தகநிலையம்**
19, பஸ் நிலையம் -- யாழ்ப்பாணம்.
தலைமை:- 193-K.K.S. ரோட்,யாழ்ப்பாணம்.

## லோக்சபையில் தினேஷ்சிங்

புதுடில்லி, பெப். 19

''இந்திய சுதந்திரத்திக்கு முன்பெ கச்சதீவு இந்தியாவுக்கு சொந்தமாக இருந்திருக்கிறது. கச்சதீவுப் பிரச்னை எழுவதற்கு முன்னர் கச்சதீவு இந்தியாவுக்குதான் சொந்தமானது என்று நாம் கருதிவந்திருக்கிறோம்.''

இவ்வாறு இந்திய தேசிய வெளிவிவகார அமைச்சர் திரு. தினேஷ்சிங் இன்று லோகசபையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கச்சதீவு இலங்கைக்கோ இந்தியாவுக்கோ சொந்தமானது என்ற பிரச்சனை இன்னும் தீரவில்லை, என்றும் இனியும் இது விஷயமாக தாமதிக்கின்ற எண்ணம் இந்தியாவுக்கோ இலங்கைக்கோ இல்லை என்றும் இலங்கை - இந்திய பேச்சு வார்த்தை மூலமே இது தீர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

வருகிற மார்ச் மாதத்தில் கச்சதீவு பெருநாள் ஆரம்பமாகும் போது இந்திய யாத்திரிகர்கள் கச்ச தீவுக்கு செல்வது பற்றியும் இங்கு பேசப்பட்டது.

## ரஷ்ய வானொலி இந்திய தேர்தல் பற்றி குறை

லாகூர், பெப். 19

இந்தியஇடைத்தேர்தலின் போது ரஷ்யாவிலுள்ள அமைதி முன்னேற்ற வானொலி தேர்தலைப் ற்றி குறை கூறியதை எதிர்த்து இந்தியா ரஷ்யாவுக்கு ஆட்சேபம் தெரிவிக்க வேண்டுமென்று ஜனசங் உறுப்பினர் ஒருவர் மத்திய அரசை கேட்டிருக்கிறார். வேறு சில உறுப்பினரும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இக்கோரிக்கைக்கு மத்திய அரசு பதில் அளிக்கையில் இந்த அமைதி முன்னேற்ற வானொலி அரசாங்க வானொலி அல்லவென்றும், சுயேச்சையான தனி பட்ட வானொலியென்றும் தெரிவித்துள்ளது.

# வேலையற்ற பட்டதாரிகள் பிரச்னை ஆராயகுழு நியமனம்

## நிதித் திட்ட அமைச்சின் கீழ் இயங்குமென அறிவிப்பு

### பல்வேறு திணைக்கள அதிகாரிகள் அங்கம் வகிப்பர்

பம்பலப்பிட்டி, புதன்

நாடு பூராகிலுமுள்ள வேலையாற்ற பட்டதாரிகளின் வேலை வசதிகள் பற்றி ஆராய்ந்தறிவதற்காக ஒரு குழுவொன்று அரசாங்கத்தால் நியமிக்கப்படவிருக்கிறது. இக்குழு நிதி திட்ட அமைச்சின்கீழ் இயங்கும். இத்தகவலை இன்று அரசாங்கம் தெரிவித்தது.

வேலையற்ற பட்டதாரிகள் பிரச்னை தொடர்ந்து அதிகரித்து வருவதை தடுப்பதற்கான முயற்சிகளை இக்குழு மேற்கொள்ளும். நாடு பூராகிலுமுள்ள பல வேலையற்ற பட்டதாரிகளுக்கு எவ்வித வேலைக் கொடுக்க முடியும் என்றும் வேலையில்லா பிரச்னையை எவ்வாறு தீர்க்கலாமென்றும் இக்குழுவினர் ஆராய்ந்து ரணை செய்யும்.

பட்டதாரிகளின் தகுதி ...

கொடுக்க முடியுமென அவர்கள் யோசனை கூறுவார்களென அரசாங்கம் கருதுகிறது.

#### வடபகுதி அசைஸ் விசாரணை

## உடுவில் கொலை முயற்சி வழக்கில் 3 வருட கடுழியம்

யாழ்ப்பாணம், வியாழன்

உடுவில் கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 3 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. முதலாவது குற்றச்சாட்டிற்கு 3 வருட கடூழியமும், இரண்டாவது குற்றச்சாட்டிற்கு 1 வருட கடூழியமும் விதித்து இரு தண்டனைகளையும் ஏக காலத்தில் அனுபவிக்கும்படியும் நீதியரசர் ஓ. எல். டி. கிறெஸ்டர் தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் 67-ம் ஆண்டு மே மாதம் 3-ந் திகதி உடுவிலில் வேலன் பெருமாள் என்பவர் இராமலிங்கம் அடுமைத்துரையை கொலை செய்ய முயற்சித்ததாகவும், இராமலிங்கம் சண்முகத்தை காயப்படுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

ஜூரிசபையினர் ஏகமனதாக கடும் காயம் விளைவித்ததற்கும் காயப்படுத்தியதற்கும் எதிரி குற்றவாளி எனத் தீர்ப்பளித்தனர்.

எதிரி சார்பில் அட்வக்கேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் எஸ். சிறீதரனின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வக்கேட் ஆர். ஆர். தங்கராசா நியமிக்கப்பட்டிருந்தார்.

## தலைமறைவாகத்திரிந்த ...

#### உப வேந்தர் பதவிக்கு

## ஒருவர் பெயரே தாக்கல்

கொழும்பு, புதன் ...

## கம்பி களவு தடுக்க கண்காணிப்பு

சங்கானை, புதன்

பெரியவிழான் தபால் கந்தோருக்கருகாமையில் தந்திக் கம்பித் திருட்டு நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. பல ரூபா பெறுமதியான இக்களவு வலி-மேற்குப் பகுதியில் ஆங்காங்கே நடைபெற்று வ...

#### யாழ்ப்பாணம்-கொழும்பு

## தொலைபேசி தொடர்பில் அடிக்கடி துண்டிப்பு

### கிளிநொச்சி எம். பி. தபால் மா அதிகாரியிடம் புகார்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையே போனில் தொடர்பு கொண்டிருக்கும் சமயங்களில் பல தடவைகளில் தொடர்பு துண்டிக்கப்பட்டு விடுவதாக மக்கள் பலர் தம்மிடம் புகார் தெரிவித்துள்ளதாக கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தபால் மகா அதிகாரி திரு. வேர்ணன் அபயசேகராவிடம் எடுத்துக் கூறி இதனை நிவர்த்தி செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையேயுள்ள தொடர்புக் கம்பிகள் பழையதாகிப்போய் விட்டபடியாலேயே இவ்விதம் அடிக்கடி தொடர்புகள் துண்டிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண தொலைபேசி நிலையசாதனங்கள் சிலவும் பழையதாகி செம்மையாக வேலைசெய்ய முடியாதிருப்பதுவும் இவ்வித துண்டிப்புக்கு காரணம் என்பது தெரியவருகிறது.

கொழும்பிலிருந்து கண்டி, காலி ஆகிய இடங்களுக்கு போனில் தொடர்பு கொள்ளும் காரியாலயங்களில் இவ்வித தடைகள் இல்லாதிருப்பதாகவும் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையே போன் தொடர்புகள் கொள்ளப்படும்போதுதான் இவ்வித தடைகள் ஏற்படுவதாகவும் கிளிநொச்சிஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தபால்மா அதிகாரியிடம் சுட்டிக்காட்டியதாகவும் அறியப்படுகிறது. (ந. நி.)

#### சிட்னி டெஸ்டில்

## வோல்டரின் சாதனை

சிட்னி, பெப். 19

சிட்னியில் நடைபெறும் 5-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 5-வதுநாளான இன்று ஆஸ்திரேலியாக் கோஷ்டி, மத்திய போசன இடைவேளைக்கு முன் சற்று முன்பாகவே 8 விக்கெட் நஷ்டத்துக்கு 394 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் ரெத்பாத் 143 ஓட்டங்களுடனும், வோல்டர் 103 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

சிட்னி மைதானத்தின் கிரிக்கெட் சரித்திரத்தில், ஆஸ்திரேலிய துடுப்படி வீரர் வோல்டர் 1-வது இன்னிங்ஸில் 'டபிள் செஞ்சரி'யும் 2-வது இன்னிங்ஸில் 'செஞ்சரி'யும் அடித்து ஒரு புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

735 ஓட்டங்களைப் பெற்றால் 5-வது டெஸ்டில் மேற்கிந்தியா வெற்றி பெறலாம், என்ற நிலையில் 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியா இன்றைய ஆட்ட முடிவில் 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 303 ஓட்டங்களைப் பெற்றது. இதில் காப்டன் சோபர்ஸ் 113 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். நேஸ் 100 ஓட்டங்களுடனும், கிரிபித் 03 ஓட்டங்களுடனும் தொடர்ந்து ஆடுகின்றனர்.

## துறைமுக கூட்டுத்தாபன தொழிலாளர் வேலைநிறுத்தம் நிராகரிப்பு

கொழும்பு, புதன் யூனியன் விடுத்திருந்தஅழை ...

துறைமுகக் கூட்டுஸ்தா ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலன் பெருமாள் என் பவர் இராமலிங்கம் அடு ... கேட் ஆர். ஆர். தங்க ராசா நியமிக்கப்பட்டிருந் தார்.

## தலைமறைவாகத்திரிந்த சகோதரர்கள் கைது

சங்கானை, புதன்

சண்டிலிப்பாய் ஐயனர் கோவில் விக்கிரகம் களவாடப்பட்டது சம்பந்தமாக தலைமறைவாகத் திரிந்து பொலிசாருக்கு டிமிக்கி கொடுத்து வந்த சந்தேக நபர்களான சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்லத்துரை சிவபாதம், செல்லத்துரை சிவஞானம் ஆகிய இரு சகோதரர்களும் பொலிசாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர்.

நேற்று முன்தினம் சிவபாதம், சிவஞானம் ஆகியோர் தலைமையில் ஒரு கோஷ்டி சண்டிலிப்பாய் ஐயனர் கோவில்விக்கிரகம்களவு சம்பந்தமான முக்கியசாட்சி ஒருவரைத் தேடித் திரிந்ததாகவும் அவர் நவாலிப் பகுதி உட்பட சில இடங்களுக்கு வீடு உடைத்துக் களவாடச் சென்றதாகவும் யாழ்ப்பாணம் பொலிசார் நடாத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது. பொலிஸ் சார்ஜண்ட் தாமோதரம்பிள்ளை தலைமையில் ரோந்து சென்ற கோஷ்டியினரே சந்தேகத்தின் பேரில் இவரைக் கைது செய்தனர். இவர்களுக்கு உடந்தையாக பிற இடங்களிலிருந்தும் முன்பு பல தடவை குற்றங்கள் புரிந்து மறியல் சென்ற பேர் வழிகளும் வரவழைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

உப வேந்தர் பதவிக்கு

## ஒருவர் பெயரே தாக்கல்

கொழும்பு, புதன்

பேராதனைப் பல்கலைக்கழக உப வேந்தர் பதவிக்கு இதுவரை ஒருவருடைய பெயர் மாத்திரமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திரு. கே. மகாதேவா (எம். ஐ. ஈ. ரி. கொழும்பு) என்பவருடைய பெயர் மாத்திரமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள திரு. ஈ. வை. பெரேரா இப்பதவிக்குத் தமது பெயர் தாக்கல்செய்யப்படுவதைத் தாம் விரும்பவில்லையெனத் தெரிவித்துள்ளார். முன்னாள்நீதிபதி திரு. பெர்னாண்டோவின் பெயரும் தாக்கல்செய்யப்படலாமெனத் தெரிகிறது. விண்ணப்பங்கள் தாக்கல்செய்யப்படவேண்டிய கடைசி நாள் இம்மாதம் 22ந் திகதியாகும்.

வேலை ... கொடுக்க முடியும் என்றும் வேலையில்லா பிரச்னையை எவ்வாறு தீர்க்கலாமென்றும் இக்குழுவிசாரணை செய்யும்.

பட்டதாரிகளின் தகுதிக்கு ஏற்ப உகந்த வேலை கொடுப்பதற்கு, இக்குழு வழிவகை மேற்கொள்ளுமென்றும், இக் குழுவில் பல்வேறு திணைக்களங்களைக் கொண்ட உயர்தர அதிகாரிகள் அங்கம் வகிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு திணைக்கழகங்களில் கடமையாற்றும் அதிகாரிகளை இவ்விசாரணைக் குழுவில் நியமிப்பதல்லா, வேலையற்ற பட்டதாரிகளுக்கு எவ்வித வேலைகளை

கந்தோருக்குகருகாமை... தந்திக் கம்பித் திருட்டு நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. பல ரூபா பெறுமதியான இக்களவு வலி-மேற்குப் பகுதியில் ஆங்காங்கே நடைபெற்று வ...தால் தபால் தந்திப் பகுதியினருக்கு நஷ்டம் ஏற்படுவதுடன் சொல்லொணுச் சிரமத்திற்கும் உள்ளாகின்றனர், இதனல் தந்திச் சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டு பொதுமக்கள் கஷ்டத்திற்குள்ளாகின்றனர். விஷமத்தனம் புரியும் சந்தேகநபர்களைக் கண்டுபிடிப்பதற்கு விசேஷ பொலிஸ் கோஷ்டி ஒன்றை சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயசூரியா நியமித்துள்ளார்.

## துறைமுக கூட்டுத்தாபன தொழிலாளர் வேலைநிறுத்தம் நிராகரிப்பு

கொழும்பு, புதன்

கொழும்புத் துறைமுகக் கூட்டுஸ்தாபனத் தலைவரின் ராஜினுமாவைத் தொடர்ந்து நேற்று நள்ளிரவு பன்னிரண்டரை மணி முதல் வேலைநிறுத்தஞ்செய்வதற்கு யூனியன் விடுத்திருந்தஅழைப்பை பல தொழிலாளர்கள் நிராகரித்துள்ளனர். யூனியனின் விருப்பப்படி வேலைநிறுத்தஞ்செய்ய ஒருசில ஊழியரே ஏற்றுக்கொண்டனராம்.

துறைமுகக் கூட்டுஸ்தாபன ஜெனரல் மனேஜர் திரு. ஹியூபேர்ட் சில்வா இதுபற்றிக் கூறுகையில், துறைமுக கூட்டுஸ்தாபனத் தலைவர் திரு. அபயகுணவர்த்தனவின் ராஜினுமா தொழிலாளருடைய நலனைப் பாதிக்கவில்லையென்பதால் வேலைநிறுத்தம் நிராகரிக்கப்பட்டதாகத் தெரிகிறது என்றார்.

அண்மையில் அமைச்சர் ஒருவர் தமது நிர்வாகம் பற்றிக் குறை கூறியதால் துறைமுக கூட்டுத்தாபனத் தலைவர் பதவியிலிருந்து திரு. அபயகுணவர்த்தன ராஜினுமா செய்ததைத் தொடர்ந்தே இவ்வேலைநிறுத்தஞ்செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

## கல்வி சுவீப் முடிவுகள்

கொழும்பு, புதன்

கல்வி நூற்றுண்டினையொட்டி கல்வியமைச்சினுல் நடத்தப்பட்ட கல்வி சுவீப் சீட்டிழுப்பு (சியவச) நேற்று கொழும்பு ரோயல் கல்லூரி மண்டபத்தில் இழுக்கப்பட்டது. பரிசுபெறும் டிக்கட்டுகள் வருமாறு:

**1ம் பரிசு**

07 W 001748 ரூ. 100,000

**2ம் பரிசு**

06 L 013506 ரூ. 40,000

**3ம் பரிசு**

04 R 000680 ரூ. 15,000

10 J 012131 ரூ. 5,000
06 Y 005614 ரூ. 3,000
04 R 012297 ரூ. 2,000

ரூ. 1,000 பரிசு பெறும் 100 டிக்கட்டுகள்:

| | |
|---|---|
| 08A008539 | 09A009544 |
| 02A014485 | 09B014249 |
| 06B014709 | 07B000154 |
| 04C002656 | 10C006936 |
| 07C013961 | 03D004056 |
| 04E006609 | 02E007218 |
| 05E004755 | 01F002149 |
| 07F003575 | 01F010350 |
| 05F005430 | 08F012411 |
| 08G003118 | 01G015685 |
| 04G508430 | 04H013612 |
| 10H008068 | 02H004953 |
| 01H002602 | 07H006340 |
| 03H015408 | 07H014705 |
| 03H004502 | 08J000388 |
| 04J013085 | 03J014402 |
| 01J015128 | 05J005905 |
| 06K014836 | |
| 02K001357 | 01K010879 |
| 02K006165 | 01L004395 |
| 02L009113 | 07L009412 |
| 01M009486 | 10M008153 |
| 10M003126 | 01M001818 |
| 04M003286 | 06M013647 |
| 01N010500 | 08N009661 |
| 07N008607 | 07N006504 |
| 03N001187 | 01Q006394 |
| 04Q000765 | 06R015045 |
| 03R011515 | 08R015959 |
| 06R010108 | 02S003301 |
| 02S009409 | 07S004467 |
| 04S002917 | 07T002946 |
| 04T011753 | 02T007402 |
| 09U00347 | 05U006551 |
| 05V007281 | 05V013551 |
| 10V005294 | 10V003374 |
| 01W003063 | 04W006828 |
| 01W012554 | 02X002944 |
| 08X015883 | 04X008305 |

| | |
|---|---|
| 04X005479 | 01X008556 |
| 04X002644 | 06X013408 |
| 10Y010289 | 10Y006851 |
| 04Y000716 | 05Y01422 |
| 07Y012913 | 06Y01429 |
| 04Z007553 | 06Z013544 |
| 02Z000483 | 05Z003804 |

பின்வரும் டிக்கட்டுகளுக்கும் மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| 07A006448 | 01A003633 |
| 09A006312 | 07A012582 |
| 04A008427 | 01A009840 |
| 01A014768 | 07B008504 |
| 09B011064 | 01B007037 |
| 07B008504 | 10B003423 |
| 09B005187 | 09B005278 |
| 07B003274 | 05B006391 |
| 09B006359 | 06C014848 |
| 04C001085 | 02C014819 |
| 08C005324 | 03C004225 |
| 04C006915 | 04D02 609 |
| 07D000890 | 04D015298 |
| 03D010398 | 02D004856 |
| 10D000173 | 06E001917 |
| 01E005018 | 09E000972 |
| 10E011766 | 03E014166 |
| 05F014052 | 08F015840 |
| 01F001085 | 09F006076 |
| 06F003836 | 10F004500 |
| 04F015902 | 09F011136 |
| 02F002886 | 01F000820 |
| 04G010529 | 06G009518 |
| 10G007844 | 05G003324 |
| 05G010652 | 09G007615 |
| 09G012914 | 10H008443 |
| 06H013271 | 06H005890 |
| 09H003682 | 08H004691 |
| 03J009194 | 04J007073 |
| 07J013496 | 04J002142 |
| 04J001757 | 03J013613 |
| 07J003023 | 09J003065 |
| 08J009009 | 09K009034 |
| 09K003649 | 10K001031 |
| 03K014906 | 06L010034 |
| 10L012358 | 02L001816 |
| 08L004597 | 02L000859 |
| 01M011398 | 01M011076 |
| 10M001259 | 01M000315 |
| 01M007209 | 10M012568 |
| 04M011392 | 04M002274 |
| 10M008497 | 03M007623 |
| 06M007839 | 04M009744 |
| 08M011044 | 08M002954 |
| 04N010062 | 06N004741 |
| 05N015392 | 02N004932 |
| 09N002163 | 06O007661 |
| 01O005806 | 07O005234 |
| 01O011551 | 10O009655 |

(4-ம்பக்கம் பார்க்க)

## தமிழ்த் தந்தி தாமதம்

யாழ்ப்பாணம், வியாழன்

'ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் போன் மூலம் கொடுக்கப்படும் தந்திகளுக்கு முதலிடம் கொடுக்கப்படுவதாகவும், தமிழ் மூலம் கொடுக்கப்படும் போது வீணை தாமதங்கள் ஏற்படுத்தப்படுவதாகவும்' கிளிநொச்சி எம். பி. பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம், தபால் மா அதிகாரி திரு. வேணன் அபயசேகராவிடம் சுட்டிக்காட்டியுள்ளார். (ந நி)

## உதவி மேயர் பிரேரணை கொண்டுவருவார்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் பொது நூல்நிலையத்தின் முன்றலில் உள்ள யாழ். நங்கை சிலையை அகற்றி அதே இடத்தில், எல்லாச் சமயத்தவருக்கும் பொதுவான கல்விக்கு தாயான கலைச் செல்வியின் சிலையொன்றை நிறுவும்பொருட்டு, யாழ். மாநகரசபையில், ஒரு தீர்மானத்தை கொண்டுவர விருப்பதாக, உதவிமேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம் நேற்று நமது நிருபரிடம் தெரிவித்தார்.

உதவிமேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம் மேலும் கூறியதாவது: தற்பொழுது யாழ் நங்கை சிலை அவலட்சணமாக இருக்கிறது. கலையம்சம் கொஞ்சம் கூட இல்லை. எல்லா மதத்தவருக்கும் பொதுவான கலைச்செல்வியின் சிலைதான் அங்கு இடம்பெறவேண்டும். ஆதலால் கலைச்செல்வியின் சிலை இடம்பெறுவதற்கு முயற்சி செய்வேன். இதுசம்பந்தமாக சபையில் ஒரு தீர்மானத்தை கொண்டுவரப் போகிறேன்.

உலகதமிழ்ஆராய்ச்சிமகாநாடு சென்னையில் நடந்தபோது நாவலருக்கு, சிலை நிறுவாததையிட்டு ஈழத்து தலைவர்கள் கவலைதெரிவித்தார்கள். ஆதலால் நாவலர் பெருமானுக்கும் யாழ்ப்பாணம் பொதுநூல்நிலைய முன்றலில் உடனடியாக சிலை நிறுவுவது அவசியமாகும். நாவலருக்கு, பொதுசன நூல்நிலைய முன்றலில் சிலை நிறுவவேண்டும் என்ற தீர்மானமொன்றையும் சபையில் கொண்டுவரவிருக்கின்றேன்.

## அன்னதானம்

பண்டத்தரிப்பு, புதன்

மாதகல்புனிதலூர்துமாதா திருநாளையிட்டு அன்னதானம் வழங்கப்பட்டது. அதிக மக்கள் இதில் கலந்து கொண்டனர்,

ஆட்சிமன்றத்தில் அண்ணுவுக்கு அனுதாபம்

## எதிர்க்கட்சியினர் எதிர்ப்பார்களாம்

கொழும்பு, புதன்

அறிஞர் அண்ணுதுரையின் மறைவு குறித்து ஆட்சிமன்றத்தில் அனுதாபத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதை எதிர்க்கட்சித் தலைவர்கள் எதிர்க்கின்றனர். இத்தகைய ஓர் அனுதாபம் தெரிவிப்பது முன்னொருபொழுதும் நடைபெருததால் இதை எதிர்க்கட்சியினர் தாங்கள் எதிர்ப்பதாகத் தெரிவித்தனர்.

சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் எதிர்க்கட்சி தீவிரமாக யாழ்ப்பாண எம். பி.யின் இத்தீர்மானத்தைஎதிர்க்கிறது எனவும், அண்ணுதுரை போன்ற ஓர் அரசியல் தலைவருக்காகத் தாங்கள் துக்கம் அனுட்டிப்பதாகவும் ஆனுல் அதே நேரத்தில் அரசாங்கத்தின் வழமையைக் காப்பாற்றுவது தங்களது கடமையாதலால் உள்நாட்டு அரசியல் தலைவர்களுக்கேயன்றி இதுகாலவரையும் பிற நாட்டு தலைவர்களுக்கு இத்தகைய அனுதாபம் தெரிவிக்கப்படவில்லை என தெரிவித்தார்.

மகாத்மா காந்தியின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்தது இவைகளுக்கு விதிவிலக்காகும் என்பதையும் டாக்டர் என். எம். பெரேரா சுட்டிக்காட்டினுர். திரு. பொன்னம்பலத்தின் தீர்மானத்தை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம் என்றும் அவர் கூறினுர்.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பீட்டர் கெனமனும் எதிர்ப்புத் தெரிவிக்கிருர்.

## நோயளியுடன் வந்த கார் பனைமரத்துடன் மோதியது

### 6 பேர் காயம்; மூவர் நிலை கவலை

யாழ்ப்பாணம், புதன்

நோயாளி ஒருவரை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு விரைந்து கொண்டிருந்த கார்ஒன்று பனைமரத்துடன் மோதியதால் அதில் பிரயாணம் செய்த 6 பேர் படுகாயமுற்றனர். இதில் மூவரின் நிலைமை மிக மோசமாகவுள்ளது. இச் சம்பவம் நேற்று விளானில் நடந்தது.

சங்கானையிலிருந்து வந்து கொண்டிருந்த குறிப்பிட்ட கார் விளான் என்ற இடத்தில் மரத்துடன் மோதியதாகவும், நோயாளியைத் தவிர்ந்த ஏனையோர் விபத்தில் படுகாயமுற்றதாகவும் கூறப்பட்டது. காயமுற்ற நவரெத்தினம் வேயோன், சைமன், ராஜேந்திரம், கண்மணி, யசந்தா, பாக்கியம் ஆகியோர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (ந. நி)

## மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்

### கருணுநிதி வற்புறுத்துகிருர்

திருவாரூர், பெப். 19

மாநிலங்களுக்கான அதிகாரங்கள் அதிகரிக்கப்படவேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணுநிதி குறிப்பிட்டார்.

திருவாரூரில் திரு. கருணுநிதி நிருபர்களிடம் பேசினுர். சமீபத்தில் நடைபெற்று முடிந்துள்ள உபதேர்தல்கள் மாகாண சுயாட்சி உடனடி தேவை என்பதை வலியுறுத்தியிருப்பதாக. திரு கருணுநிதி குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் தொழில் பெருக்கத்துக்கான சூழ்நிலையை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் தொழில் தேக்கநிலை ஏற்பட்டிருப்பதற்கு தமது அரசின் கொள்கை காரணமில்லையென்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொதுவான மந்தநிலையே இதற்குக் காரணம் என்றும் திரு. கருணுநிதி குறிப்பிட்டார்.

திருக்கேதீஸ்வரத்தில்

## குழந்தையை கடத்தினராம்

நல்லூர், புதன்

திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரியன்று 4 வயதுக் குழந்தை யொன்றை இனந்தெரியாத நபர் கோவிலில் வைத்து கடத்திச் சென்றுவிட்டாராம்.

மன்னர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. டொனல்ட் மெண்டிஸ் இது சம்பந்தமாக கிருஷ்ணபிள்ளை என்பவரை சந்தேகத்தில்கைது செய்துபிள்ளையையும் கண்டுபிடித்து உரியவர்களிடம் சேர்த்தார்.

பொலிசார் கிருஷ்ணபிள்ளையின்மீது குழந்தையைக் கடத்தியதாகக் குற்றம் சாட்டி வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். தற்போது சந்தே நபரான கிருஷ்ணபிள்ளை பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### தேவை

பூநகரி வாடியடியில் 24 ஏக்கர் தென்னை, பனை, நெல் வயலும் சங்குப்பிட்டி துறை முகத்திற்கு அண்மையில் 16 ஏக்கர் தென்னை, மா, நெல்வயல், குடியிருக்கும் வசதியுடனும் காணிகள் விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 674 'ஈழநாடு' மே/பா யாழ்ப்பாணம். 674

### கல்வி

வகுப்புக்கள்:

மத்திய எழுதுவினைஞர், சிறுப்பர் பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் அனுபவமுள்ள பட்டதாரிகளால் கற்பிக்கப்படுகின்றன. இரு பாலாருக்கும் விடுதி வசதியுண்டு. விண்ணப்பிக்கவும். வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை. 684

## இரு வழக்குகள்

குரும்பசிட்டி, புதன்

பனிப்புலத்தைச் சேர்ந்த எம். பாலசுப்பிரமணியம், எம். கந்தசாமி ஆகிய இரு சகோதரர்களுக்கு எதிராக நன்னி நாகமுத்து ஆகியோரைக் கத்தியால் வெட்டிப் படுகாயப்படுத்தியதாகவும், தம்பிராசா, சௌந்தரம் ஆகிய இருவருக்கும் காயம் ஏற்படுத்தியதாகவும் குற்றம் சுமத்தி சங்கானைப் பொலிசாரால் தொடரப்பட்ட இரண்டு வழக்குகள் மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர் கேட்டவை.

344 மீ. அன் 19 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 வாய்ப்பாட்டு 6-45 பாவளம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 விவாத மேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைப் பயிற்சி.

## அவதூறுக ஏசினுராம்

குரும்பசிட்டி, புதன்

பொலிஸ்கான்ஸ்டபிள்கள் மூவர் முன்னிலையில் வைத்து அவதூறன வார்த்தைகளால் கிராமசேவையாளரை ஏசியதாக அளவெட்டியைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் மீது சுன்னுகம் பொலிஸார் தொடர்ந்துள்ள வழக்கின் தீர்ப்பு இம்மாதம் 26-ந் திகதி மல்லாகம் மாஜிஸ்திரேட்டினுல் வழங்கப்படும்.

## சிவராத்திரி விழா

### தெல்லிப்பழையில்

அளவெட்டி, புதன்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் சிவராத்திரி விழா கொண்டாடப்பட்டது. தெல்லிப்பழை யூனியன்கல்லூரி இந்துசமய அபிவிருத்திச்சங்கத்தின் ஆதரவில் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்ற இச் சிவராத்திரிவிழாவில் நான்கு ஜாமமும் விசேட பூசை, ஆராதனைகள் இடம்பெற்றன.

சென்னை மெய்கண்ட ஆதீனவித்துவான் திரு. பி. எ. எஸ். இராசசேகரத்தின் மாணவனுன வி. சுப்பிரமணியத்தின் பக்திப்பாடல் இவ்விழாவில் இடம்பெற்றது.

0 0 0

### கீரிமலையில்

அளவெட்டி, புதன்

கீரிமலையில் சிவராத்திரி விழா நடைபெற்றது. அன்று இரவு முதல் அதிகாலை வரை பக்தர்கள் நித்திரை செய்யாதிருக்க இசைநிகழ்ச்சிகளை கீரிமலை நகுலேஸ்வர சனசமூக நிலையம் கடற்கரையில் நடத்தியது.

0 0 0

### மாவிட்டபுரத்தில்

அளவெட்டி, புதன்

இளைஞரின் சிரமதானம் மூலம் புனரமைப்பு செய்யப்பட்ட மாவிட்டபுரம் வீணியவரை அம்மன் ஆலயத்தில் முதல்முறையாக சிவராத்திரிவிழா கொண்டாடப்பட்டது.

யாழ். மத்தி-குருநாகல் கிரிக்கெட்

## வெற்றிதோல்வியில்லை

யாழ்ப்பாணம், வியா.

யாழ். மத்திய கல்லூரிக்கும், குருநாகல் மாலியதேவா மத்திய மகாவித்தியாலயத்துக்குமிடையில், யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ், மத்திய கல்லூரி, சகல விக்கெட்டுகளையும்இழந்து மொத்தம் 158 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரஞ்சித் குமார், தயாசிங்கம் முறையே 41, 34 ஓட்டங்களைப் பெற்றனர்.

மாலியதேவா முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 217 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் யட்டவற, பத்திராணு. தஸ்நாயக்கா முறையே 58, 57, 58 ஓட்டங்களைப் பெற்றனர். தில்லையம்பலம் 4 விக்கேட்டுக்களையும், ரஞ்சித்குமார் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

மத்திய கல்லூரி 2 வது இன்னிங்ஸில் மொத்தம் 116 ஓட்டங்களைப் பெற்றது. தயாசிங்கம் 38 ஓட்டங்களையும், பாலேந்திரா 24 ஓட்டங்களையும், ஜெயரட்ணகுமார் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பத்திராணு 46 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினுர்.

நேரமின்மையால் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது.

### 22-ம் திகதி போட்டி

கண்டி சென். சில்வெஸ்டார் கல்லூரிக்கும் யாழ் மத்திய கல்லூரிக்கும் வருகிற 22-ம், 23-ம் திகதிகளில் மத்திய கல்லூரி மைதானத்தில் கிரிக்கெட் போட்டி நடைபெறவிருக்கிறது.

## விளையாட்டு வீரருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், வியா.

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் இலங்கை இளைஞர் உதைபந்தாட்டத் தெரிவுக்கோஷ்டியில் தெரிவு செயயப்பட்டு இந்தியா சென்றுள்ள பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக அங்கத்தவர்களாகிய இ. பிரான்சிஸ், செ. கிளிபேட் ஆகியோருக்கு வரவேற்பளித்துக் கௌரவிப்பதற்கு பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக செயலாளர் திரு, எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட மூவரில் இருவர்' பாஷையூர் சென். அன்ரனில் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர்களென்பது குறிப்பிடத்தக்கது இம் மாத இறுதியில் வரவேற்புக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. (ந. நி.)

## 'ஈழத்துக்கு பெரும் இழப்பு'

அளவெட்டி, வியா.

'தமிழகத்தில் தமிழிசையை வளர்ககும் நோக்குடன் அண்ணுமலை இசைத் தமிழர் மன்றம் அமைக்கப்பட்டதுபோல ஈழத்திலும் அண்ணுமலை இசைத்தமிழ் மன்றம நிறுவ காரணமாக இருந்தவர்களில் ஒருவரான திரு. நமசிவாயத்தின் மறைவு ஈழக்கலைஞர்களுக்கு மட்டுமல்லஈழத்துக்குமே பெரும் இழப்பு.'

இவ்வாறு நாதஸ்வர வித்துவான் திரு. என். கே, பத்மநாதன் சங்கீத பூஷணம் ஆ. நமசிவாயத்தின் மறைவையொட்டி அவரின் குடும்பத்துக்கு அனுப்பிய அனுதாபச் செய்தியில்குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

கலைஞர்களைக் கௌரவிக்கும் ஆசைகொண்ட நமசிவாயம் தரமான கலைஞர்களைக் கௌரவித்து அவர்களை நாட்டிற்கு அறிமுகப்படுத்தி கலைஉலகுக்கு அரும்பெரும் சேவைசெய்துள்ளார். கலைஞர்களை முன்னணிக்கு கொண்டுவந்து இசையை வளர்க்க தன்னுலானசேவை செய்ய அவர் ஒருபோதும் தயங்கியதில்லை.

## சண்டிலிப்பாய்கொலைவழக்கு
### சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரம்

குரும்பசிட்டி, புதன்

சண்டிலிப்பாய் தம்பிஐயா கொலைவழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கத்தால் உயர்நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. எதிரிகள் மூவரையும் ரிமாண்டில் தொடர்ந்து வைக்க உத்தரவிட்டு சுப்ரீம்கோர்ட் விசாரணைக்கு நிற்கும்படியும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். எதிரிகள் வழக்கு சுப்ரீம்கோர்ட்டில் சிங்களம்பேசும் ஜூரர்கள் முன்னிலையில் விசாரிக்கப்படவேண்டுமென நீதிபதியிடம் தெரிவித்தனர்.

கடந்தவருடம் மே மாதம் 20-ந் திகதி செல்வராசா, தங்கராசா, தேவராசா ஆகிய மூவரும் கே. தம்பிஐயா என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ததாகவும், கே. குணரத்தினம் என்பவரை கொலை செய்ய எத்தனித்ததாகவும் சங்கானைப் பொலிஸார் இவ்வழக்கை தொடர்ந்துள்ளனர்.

பொலிஸ்தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் வழக்கை நடத்தினுர்.

## 'கோடரியால் தலையில் வெட்டினுர்'

வல்வெட்டித்துறை, புதன்

''வாருண்டா வாருங்கோடா' என்று முதலாம் எதிரி சத்தம் போட்டதும் மற்ற எதிரிகள் எல்லோரும் எனக்குக் கிட்டவந்து என்னைத் தாக்கிவிட்டு தங்கள் வீட்டு வாசல்வரை இழுத்துச் சென்றனர்'' என்று கரணவாய் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சுப்பிரமணியம் என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கில் கரணவாய் வடக்கைச்சேர்ந்த த. வைத்திலிங்கம். த. மாணிக்கம், வை, தவலிங்கம், வை. தருமலிங்கம், வை. தங்கம்மா ஆகியோர் அதேஇடத்தைச் சேர்ந்த சி. சுப்பிர

வெட்டியவர் முதலாம் எதிரியென அடையாளம்கண்டு கண்டுகொண்டேன். கோடரியால் வெட்டியதும் குழறிக்கொண்டு நிலத்தில் விழுந்துவிட்டேன். மற்ற எதிரிகளும் வந்து கொட்டனுலும் தடியாலும் என் உடம்பில் அடித்தனர். பின்னர் எல்லோருமாகச் சேர்ந்து என்னை தங்கள் வீட்டு வாசல்வரை இழுத்துச்சென்றனர். இந்த அநியாயத்தை வுன் செய்கிறீர்களென பக்கத்துவீட்டு பேரம்பலம் எதிரிகளைப் பார்த்துக் கேட்டார். பின்னர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டேன். இப்போ கை கால் வழங்க முடியாத நிலையில் இருக்கிறேன்.''

மேல்விசாரணை இம்மாதம் 22-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ''விழிப்புணர்ச்சி ஏற்படுத்திய வித்தகர்''

அளவெட்டி' புதன்

மூடக் கொள்கைகளில் மூழ்கியிருந்த தமிழ் சமூகத்தில் விழிப்புணர்ச்சியை தோற்றுவித்தவித்தகர் அறிஞர் அண்ணு. அரசாங்கப் பணியகங்கள் எங்கும் தமிழ் வழங்க வைத்வர் அவர். ஆங்கிலத்திலும் நிகரற்ற புலமை கொண்டிருந்தாலும் அதீத தமிழுணர்ச்சி வாய்க்கப்பெற்றவராய் விளங்கியவர் அண்ணு.

இவ்வாறு அண்ணுவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக யாழ். இலக்கிய நண்பர் கழகம் நடத்திய அனுதாபக் கூட்டத்தில் பேசிய பண்டிதர் சி. சிவஞானசுந்தரம் கூறினுர்.

திரு. பூ. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. க. மயில்வாகனம் பேசுகையில் கூறியதாவது:

மிவும் சிறிய காலமே ஆட்சி பீடத்தில் இருந்தாலும் வியக்கத்தகு பணிகள் பல ஆற்றியவர் அண்ணு அனைத்துலகமும் அதிசயிக்கும் வண்ணம் நிகழ்ந்த இரண்டாவது தமிழாராய்சியகாநாடு சிறப்பாக அமைவதற்கு அண்ணுவும் அவரது அரசுமேகாரணம்.

திரு ஆ. மகாதேவன், கவிஞர் விஜயேந்திரன், திரு. க. குணலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

## இணுவில் விளையாட்டுக் கழக கோரிக்கை

உடும்பராய், புதன்

இராமநாதன் கல்லூரி இணுவில் கிராமத்திலிருந்தும், அவர்களது ொக்குப் பதிவும் கூப்பன், நிலம் ஆகியவை இணுவில் கிராம சேவையாளரின் பகுதியிலிருந்தும் இப்பாடசாலை தனது விலாசத்தை சுன்னுகம் என வைத்திருப்பது சரியல்லவெனவும் இதனை இணுவில் — சுன்னுகம் என மாற்றும்படியும், இக்கல்லூரி அமைந்திருக்கும் இணுவிலின் பெயர் இடம்பெற வேண்டுமெனவும் இணுவில் இந்து விளையாட்டுக்கழகத்தி[illegible] கோரிக்கை விடுத்துள்ளனர்.

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கத்[illegible] விரைவில் [illegible] இக் கழகத்தின் தலை[illegible]

## 9 கோல் போட்டனர்

உடும்பராய், புதன்

இணுவில் தெரிவுக்கோஷ்டிக்கும் கந்தரோடை தெரிவுக்கோஷ்டிக்குமிடையே சிநேகிதபூர்வமாக நடைபெற்ற 'ஏ' பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் இணுவில் 9 - 0 கோலால் கந்தரோடையை வெற்றி பெற்றது.

இணுவில் கோஷ்டியைச் சேர்ந்த இலகுநாதன் ஏழு கோலையும், சண்முகம், இரத்தினம் ஆகியோர் முறையே ஒவ்வொருகோலையும் போட்டனர்.

இணுவில் எச்சாட்டி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. ஆர். தங்[illegible]சா மத்தியஸ்தராக கடமை யாற்றினுர்.

## '[illegible]வித்தியாலயம் வேண்டும்'

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புகையிலையும் காய்கறியும்
பயிரிடும் கமக்காரரே!
பொஸ்ஹறின்

5-வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
ஒளி விளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா. போயா 2-30 மணி
மஞேகர் - வீரப்பா,
ராஜசுலோசனு
நடித்த
கைதி
கண்ணுயிரம்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்

# போஸ்றின்

அழுக்கணவனையும் மற்றெல்லாக் கிருமிப்பீடைகளையும் ஒழிக்கவல்லது.

உடனே செயலாற்றும் சக்தி வாய்ந்த இந்த ரசாயனப்பொருளை அறுவடைக்கு முதல்நாள் வரை தெளிக்கலாம்.




ரசாயனபபொருளை நினையுங்கள், ஷெல்லை நினையுங்கள் 'அலமெறகஸ்', 'டீல்றெக்ஸ்' 20, 'டீல்றெக்ஸ் எக்ஸ்டரா', 'ஆகொடீல்', 'என்றெக்ஸ்' 20, 'பிட்றின்', 'மலதியன்', 'சுமத்தியன்', 'ஷெல் களைப்புற்கொல்லி எம் 50', 'ஸ்டாம்' எப-34, 'கிறமஸின்', ஷெல் பீ. எச். சி 10% தூள் இவை ஷெல் ஸ்தாபனத்தாரின் விரிவான விவசாய ரசாயனப் பொருட்களில சில மாத்திரமே



எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்

AGENTS

## றேயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA


...கோரிக்கை விடுத்துள்ளனர்.

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கத்தை இதுவிஷயமாக விரைவில் சந்திக்கவிருப்ப...இக் கழகத்தின் தலைவர் திரு. செ. இலகுநாதன் தெரிவித்துள்ளார்.

## இன்றைய பலன்

வியாழக்கிழமை
(20-2-69)
மாசி மாதம், 9 உ

திதி- சதுர்த்தி இரவு 8-17ன் மேல் பஞ்சமி.

நட்சத்திரம்- ரேவதி இரவு 2-53 மேல் அச்சுவினி.

ராகுகாலம் 2-02 3-32.

சுபநேரம்- 8-02 - 9-32.

இன்று பிறந்தவர்களுக்கு எதிர்பாராத வரவு உங்களைத் திகைக்க வைக்கலாம். கட்டிடக் கலைஞர்களுக்கு மிகவும் சிறப்பான காலம். குடும்பஸ்தர்களுக்கு வாழ்வில் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். கன்னிப் பெண்கள் வாழ்க்கையில் திடீர் திருமணங்கள் இடம்பெறும் நல்லாண்டாகும்.

மேஷம்- மகிழ்ச்சிப் பெருக்கு மனையியல் நாட்டம்.

ரிஷிபம்-ஆழ்ந்த சிந்தை ஆக்கவிருத்தி.

மிதுனம்- வாகனசுகம், வரவிலும் நலம்.

கடகம்- மைந்தர்களால் மகிழ்ச்சி, மனம்போல் வாழ்வு.

சிம்மம்- ஆயுதபயம், அவசரம்வேண்டாம்.

கன்னி- நல்வழி நாட்டம், நகைச்சுவை.

துலாம்- கண்துடைப்பு வேலை, கவனம்வேண்டும்.

விருச்சிகம்- உற்றூர் வருகை, உவகை மிகுதி.

தனுசு- தனச்சிறப்பு தானியவிருத்தி.

மகரம்- சீரான வாழ்வு சிறப்பும் உண்டு.

கும்பம்- தற்பெருமை, தடுமாற்றம் உண்டு,

மீனம்- உறக்கமின்மை உயர்வில் தாமதம்.

சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

...மத்தியஸ்தராக கடமையாற்றினர்.

## 'மகாவித்தியாலயம் வேண்டும்'

உரும்பராய், புதன்

இணுவில் கிராமத்திற்கு ஒருமகாவித்தியாலயம் இல்லாதபடியால் இவ்வூர் மாணவர்கள் அயல் கிராமங்களுக்கு சென்று கல்வி பயில வேண்டியிருக்கின்றது. இந்நிலை மாறி இணுவில் கிராமத்திற்கு ஒரு மகாவித்தியாலயத்தை கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்தித்தரும்படி உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்தை சந்தித்து தூதுகோஷ்டி வற்புறுத்தியது.

உடுவில் கிராமசபை அங்கத்தவர்களும் இணுவில் சைவ மகா ஜன வித்தியாசாலை பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகளும் இத் தூதுகோஷ்டியில் இடம் பெற்றிருந்தனர்.

## கருணாநிதிக்கு பாராட்டு

கொழும்பு, புதன்

''களம் பலகண்ட கன்னித் தமிழின்காவலன் கருணாநிதி தலைசிறந்த சொல்லேர் உழவர், செஞ்சொற் செல்வர், சிறைபல சென்று செந்தமிழ் காத்தவர், செயற்கரிய பல செய்த செம்மலும்கூட, இத்தகைய சிறப்புப் பலவெய்திய இப்பெருமகன், மறைந்தும் மறையாத மாபெருந் தலைவர் அறிஞர் அண்ணாவின் இடத்தை நிரப்பும் முறையில் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்றது சாலவும் பொருத்தமுடையதே!'' என்று மத்திய வங்கித் தமிழ் இலக்கிய மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

## 'தமிழில் அனுப்புக'

யாழ்ப்பாணம், வியா.

'யாழ்ப்பாணம் கச்சேரியிலிருந்து அனுப்பப்படும் கடிதங்களை தமிழில் அனுப்புக' இவ்வாறு கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ்சைக் கேட்டுள்ளார்.

பூநகரி, கிளிநொச்சி, பளை, துணுக்காய் ஆகிய இடங்களிலுள்ள மக்கள் இதுபற்றி ஆட்சிமன்ற உறுப்பினருக்கு புகார் செய்துள்ளதைத் தொடர்ந்தே அவர் அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டிருந்தார்,

(ந. நி.)

இவ்வழக்கில் கரணவாய் வடக்கைச்சேர்ந்த த. வைத்திலிங்கம். த. மாணிக்கம், வை, தவலிங்கம், வை. தருமலிங்கம், வை. தங்கம்மா ஆகியோர் அதேஇடத்தைச் சேர்ந்த சி. சுப்பிரமணியத்திற்கு 67-ம்ஆண்டு மே மாதம் 16-ந் திகதி கோடரியால் வெட்டியும் கொட்டனால் அடித்தும் படுகாயம் உண்டுபண்ணியதாக பொலிசாரால் குற்றஞ் சாட்டப்பட்டது.

சின்னத்தம்பி சுப்பிரமணியம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவதினம் இரவு 8-30 மணியளவில் எனது தாயார் வீட்டிலிருந்து வீட்டிற்குப் போவதற்காக வெளியில் வந்தேன். அப்போ யாரோ ஒருவர் என் கண்ணுக்கு 'லைற்' அடித்தார். உடனே வாருண்டா வாருங்கோடா என்று சொல்லிவிட்டு அவர் கோடரியால் என் தலையில் வெட்டினார். கோடரியால்...

...க்கு எடுத்துச் செல்லப்பட்டேன். இப்போ கை கால் வழங்க முடியாத நிலையில் இருக்கிறேன்.''

மேல்விசாரணை இம்மாதம் 22-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ஏழாலை கொலை வழக்கு
### எதிரிகள் சரண்

குரும்பசிட்டி, புதன்

மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை ஏழாலை கொலை வழக்கு சம்பந்தமாக சுன்னாகம் பொலிசாரால் தேடப்பட்ட வீ. மகாலிங்கம், கே. தங்கராசா, சே. விசுவலிங்கம், வீ. கதிர்காமலிங்கம் ஆகிய நான்கு எதிரிகளும் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் மூலம் சரணடைந்தனர். நீதிபதி எதிரிகளை இம்மாதம் 26-ந் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். முதலாம், நாலாம் எதிரிகள் மூன்றும் எதிரியின் மக்களாவர்.

## விஞ்ஞான சுற்றுலா

அளவெட்டி, புதன்

வசாவிளான் மத்திய மகாவித்தியாலய ஜி. சி. ஈ. வகுப்பு மாணவர்கள் ஒரு விஞ்ஞான சுற்றுலாவை நடத்தினர்.

இவ்வித்தியாலய விவசாய விஞ்ஞான ஆசிரியர் திருகுககுமாரராஜா தலைமையில் சென்ற 30 மாணவர் கொண்ட குழுவினர் கிளிநொச்சி விவசாயக் குடியேற்றத் திட்டங்களையும், கிளிநொச்சி விவசாயக்கல்லூரியையும், ஐ. ஆர்-8 இன நெல்லை ஆராய்ச்சி செய்யும் நிலையத்தையும் மற்றும்பல விஞ்ஞான விவசாய சம்பந்தமான இடங்களையும் பார்வையிட்டனர்.


கண்ணாயிரம்

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த
**குடியிருந்த கோயில்**

**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் விஜயநிர்மலா நடித்த
**நீலகிரி எக்ஸ்பிரஸ்**

**MANOHARA**
JAFFNA
Daily at 4-45, 7-00, & 9-45 p. m.
Pre Poya-Poya 10-30 a. m.
Raquel Welch
in
ONE MILLION YEARS B. C.
(Col r)
Owing to limited Engagements advance Bookings for Balcony, Reserve and 1st Class are available.

கடைசி 2 தினங்கள்
இணுவில்
**ஸ்ரீ காலிங்கன்**
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெமினி - காஞ்சனா நடித்த
**வீர அபிமன்யு**

கடைசி இரு தினங்கள்!
**வெலிங்டன்** — யாழ்நகரில்
தினசரி 2-30, 6-30, 9-30 மணிக்கு
**எம். ஜி. ஆர். - சாவித்திரி**
நடித்த
கௌரி பிக்சர்ஸ் **பரிசு**

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
S. S. வாசன் அவர்களால்
ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்
மற்றும்



மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!

தமிழ்நாடுசென்று விழாவைப் பார்க்காதவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
ஒவ்வொரு தமிழனும் அவசியம் பார்க்கவேண்டிய படம்.

கிங்ஸ்லி பிளாஸா
22-ந் திகதி முதல்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
**சிவாஜி—கே. ஆர். விஜயா**
முத்துராமன்—நாகேஷ்—எல். விஜயலக்ஷ்மி
நடித்த
**உயர்ந்த மனிதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தலைவர்களை மக்களே தெரிவுசெய்வர்

## அமைச்சர் விளக்குகிறார்

கட்டுகாஸ்தோட்டை, புதன்

கண்டிமாவட்ட கிராம சபைகளின் தலைவர்களாலும், இலங்கை நூல் நிலைய சங்கத்தின் பிரதேசப் பகுதியினராலும் ஒழுங்கு செய்யப்பட்ட பிரதேச மகாநாட்டில் உரையாற்றிய உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாச உள்ளூராட்சி மன்றத் தலைவர்களை தேர்ந்தெடுக்கும் முறை மாற்றியமைக்கப் படவேண்டுமெனத் தனக்குக் கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளதாகக் கூறினார். இந்தத் தீர்மானம் தன்னுடையதோ அல்லது அரசாங்கத்தினதோ அல்ல எனவும் உள்ளூராட்சி அமைச்சின் நலன் கருதுபவர்களால் தீர்மானிக்கப்பட்டதென அவர் வற்புறுத்திக் கூறினார். உள்ளூராட்சித் தலைவர்கள் தெரிவின் போது பல உள்ளூராட்சிஅங்கத்தவர்களால் சில அங்கத்தவர்கள் கடத்தப்பட்டுள்ளதால் தெரிவு திகதியை ஒத்திப் போடும்படி தன்னைக் கேட்டுள்ளமையையும் அவர் குறிப்பிட்டார். இதனாலேயே இத்தகைய ஒரு தீர்மானம் வந்துள்ளது எனத் தெரிவித்த அமைச்சர் இத்தீர்மானத்தின்படி 'ஒவ்வொரு வாக்காளருக்கும் 2 வாக்குகள் வழங்கப்படும்' ஒன்று தனது பகுதி அங்கத்தவரைத் தெரிவு செய்யவும், மற்றது உள்ளூராட்சி மன்றத் தலைவரையோ அல்லது மேயரையோ தெரிந்தெடுக்கவும் பயன்படும் இதனால் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மக்களினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். தலைவருக்கோ, மேயருக்கோ போட்டியிடும் அங்கத்தவர் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்துக்குப் போட்டியிட அனுமதிக்கப்படார். எனத் தீர்மானத்தை விளக்கிக் கூறிய திரு. பிரேமதாசா இத்தகைய மாற்றத்தை விரும்பியவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் இத்தலைவரோ அல்லது மேயரோ கட்சி சார்பற்றவராகத் தனது கடமையைச் செய்யக் கூடியவராக இருப்பார் எனத் தெரிவித்துள்ளார்கள் எனக் குறிப்பிட்டார்.

நாட்டின் சகல பாகங்களிலும் உள்ள உள்ளூராட்சி மன்றங்களே அவ்வப் பகுதி நூல் நிலையங்களுக்குப் பொறுப்பாக விருப்பதால் உள்ளூராட்சி அமைச்சில் நூல் நிலையங்கள் முக்கிய இடம் பெறுகின்றனவெனவும் நூல்நிலையங்களின் வளர்ச்சிக்குத் தனதமைச்சு உதவியளிக்குமெனத் தெரிவித்தார்.

# '5000-ம் ஆண்டின் பின் மனிதன் நிற்கவும் இடமிராது'

புன்னாலைக்கட்டுவன், புதன்

"உலகின் தற்போதைய சனத்தொகை 300 கோடி. இதே வேகத்தில் ஜனப்பெருக்கம் சென்றுகொண்டிருந்தால், 2000-ம் ஆண்டில் 600 கோடியாகும். இலங்கையில் வினாடிக்கு 70 குழந்தைகள் வீதம் பிறக்கின்றன ஒருவருக்கு சராசரி ஒன்றரை ஏக்கர் நிலம்தான் தற்போது உண்டு. இதே ரீதியில் பார்க்கப்போனால் 5000 ஆண்டின் பின் மனிதன் நிற்கக்கூட இடமில்லாதுபோய் விடும். இப்படியான இடப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஆராய்ச்சியாளர் பாலைவனங்களையும் துருவங்களையும் சீர்திருத்தி மக்களைக் குடியேற்றுவதற்கு துரிதமாக ஈடுபட்டு வருகிறார்கள்."

இவ்வாறு திரு. வி, மகாதேவா யாழ். இந்துக்கல்லூரி புவியியற் சங்கக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார். செல்வன் ரி. பிரகலாதீசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் செல்வன் என். ஸ்ரீதரன் நன்றியுரை கூறினார்.

# "இலங்கை அரசியல் பற்றி அண்ணாவுக்கு அதிக அக்கறை"

## அஞ்சலி கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி.

கொடிகாமம், புதன்

'இலங்கையைப் பற்றியும் இலங்கை அரசியல் தலைவர் ...

புலவர்தமிழ்மாறன், திரு. க. கணேசலிங்கம், புலவர் பார்வதிநாதசிவம் திரு .சி. ...

# சிரமதான மூலம் பிறப்பு பத்திரம்

## வட பகுதியின் முன்மாதிரி

நல்லூர், புதன்

யாழ்ப்பாணம் பிறப்பு பதிவுக் கந்தோரில் பிறப்புப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பங்கள் நிரம்பி வழிவதை சமாளிப்பதற்காக மேலதிக மாவட்ட பதிவுகாரர் திரு. எம். எஸ். ராஜசிங்கம் சிரமதான முறையைக் கையாண்டுள்ளார்.

அலுவலக நேரத்துக்கு முன்னரும், பின்னரும், போயா நாட்களிலும் பதிவுகாரர் காரியாலயத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் இச்சிரமதான வேலையில் ஈடுபட்டுவருகின்றனர். மேலதிக பதிவுகாரர் திரு. எஸ். ராஜசிங்கம் தலைமையில் நடைபெறும் துரித சிரமதான வேலையால், பிறப்புப் பத்திரங்களை பொதுமக்கள் உரிய காலத்தில் பெறக் கூடியதாகவிருக்கிறது. —

# யு. என். பி. கிளை

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டித் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சிக் கிளை ஒன்று விரைவில் திறந்து வைக்கப்பட இருக்கின்றது. இக்கிளை நெல்லியடியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகிறது.

# தபால்நிலையம் இடம்மாறியது

சுழிபுரம், புதன்

மாதகல் உபதபால் கந்தோர் தற்போதைய இடத்தில் இருந்து வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாதகல்கிழக்கு அரசடிப் பிள்ளையார் ரோட்டில் தற்போதைய இடத்தில் இருந்து ஐம்பது யார் தூரத்தில் தபால் கந்தோர் இயங்குகின்றது.

# 'வழிகாட்டியவர்

புன்னாலைக்கட்டுவன், புதன்

தமிழருக்குளிருக்கும் பல பிரிவினைகளைப்போக்கி தமிழன் தனது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வழிகாட்டியவர் அறிஞர் அண்ணா.

இவ்வாறுஅறிஞர் அண்ணாவின் அஞ்சலிக் கூட்டத்தில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

ஊரெழு பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில், தமிழினத்தின் ...

ஒருபெண்உட்படநான்குபேர்

# ஓடிக்கொண்டிருந்த இஸ்ரேல் விமானத்தை காரில்வந்து சுட்டனர்

# சூரிச்சில் அரபு கொரில்லா நடவடிக்கை

சூரிச், பெப்.19

**அரபு 'கொரில்லா' இயக்கத்தைச் சேர்ந்த ஒரு கோஷ்டி நேற்று சுவீட்சர்லாந்திலுள்ள சூரிச் சர்வதேசவிமான நிலையத்தில் இஸ்ரேல் விமானம் ஒன்றின்மீது தாக்குதல் நடத்தியது.**

**இஸ்ரேல் ஆக்கிரமித்துக்கொண்டுள்ள பகுதிகளில் அரபு மக்கள் காட்டு மிராண்டித்தனமாக கொடுமைகளுக்காளாக்கப்படுவதற்கு எதிர் நடவடிக்கையாக அரபு கொரில்லா படையினர் இந்த விமானத்தை தாக்கினார்களாம். இத்தகவலை பாலஸ்தீன் அரபு 'கொமாண்டோ' ஸ்தாபனம் அறிவித்துள்ளது.**

சூரிச் விமான நிலையத்திலிருந்து 'போயிங்' பிரயாணிகள் விமானம் 30 பிரயாணிகளுடன் இஸ்ரேல் தலைநகரான 'டெல்அலிவ்' நோக்கிப் புறப்படுவதற்காக தயாராகி சிறிதுதூரம் ஓடுபாதையில் ஓடத் தொடங்கியபோது தானே இயங்கும் யந்திரத் துப்பாக்கிகளால் ஒரு காரிலிருந்தபடி நான்குபேர் சுட்டார்கள். இந்த நான்குபேரில் ஒரு பெண்ணும் இருந்தார். விமானம் பலத்த சேதத்துக்குள்ளானது. விமானி உட்பட பிரயாணிகள் பலரும் காயமடைந்தார்கள். தற்காப்பிற்காக விமானத்திலிருந்த பாதுகாவலர் திருப்பிச் சுட்டார். இதில் கொரில்லா தாக்குதல் நடத்தியவர்களில்ஒருவர் கொல்லப்பட்டார். காரிலிருந்தவர்களும் விமானத்திலிருந்து சுட்டவரும் உடனடியாகக் கைது செய்யப்பட்டார்கள்.

இஸ்ரேலியரின் காட்டுமிராண்டி நடவடிக்கைகளுக்கு எதிர் நடவடிக்கையாக அரபு கொரில்லாப் படையினர் இந்த தாக்குதலைநடத்தியதாக 'பாலஸ்தீன' கொமாண்டோ இயக்கத்தினர் அறிவித்துள்ளனர்.

சில மாதங்களுக்கு முன் ஏதென்ஸில் இவ்வாறு இஸ்ரேல் விமானம் ஒன்று அரபு கொரில்லா துருப்புகளால் தாக்கப்பட்டது.

அடுத்த சில தினங்களில் பேரூட் சர்வதேச விமான நிலையத்தில் 14 விமானங்களை இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் தாக்கி நிர்மூலமாக்கின. அதேபோல் இந்த முறையும் இஸ்ரேலியர் பழிவாங்கும் நடவடிக்கைகளில் இறங்குவார்கள் என்று அஞ்சப்படுகின்றது.

## யுதாண்ட் கண்டனம்

இஸ்ரேல் விமானம் சூரிக்கில் தாக்கப்பட்டது குறித்து ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் பழிவாங்கும் நடவடிக்கைகளில்இறங்காது என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல் புத்தியற்ற வேலையென்று அமெரிக்கா கண்டித்திருக்கிறது.

# அயூப் அழைப்பை ஏற்க பூட்டோ, அஸ்ஹர்கான் மறுப்பு

## பேச்சுகள் ஆரம்பமாவதில் மீண்டும் முட்டுக்கட்டை

ராவல்பிண்டி, பெப்10

[illegible]சியல் திட்டத்தில் மாற்றங்கள் செய்வதுபற்றி பாகிஸ்தான் அதிபர் அயூப் கான் இன்று நடத்த இருந்த ஆலோசனைக் கூட்டம் ந[illegible] பெறவில்லை. பேச்சுக்களில் கலந்து கொள்வ...

அவாமிக் கட்சியின் தலைவர் மஹபானுபாசானி, [illegible]பார் மாஷல் அஸ்ஹர்கான், லெப்டினன்ட் ஜெனரல் அஸம்கான், நீதிபதி செய்யதமகுபூ முஸீத் ஆகிய மற்றத் தலைவர்களும் அயூப்கானின் அழைப்பை[illegible]ற்று...

# ஆட்சி மன்றத்தில் காமராஜர்

புதுடில்லி, பெப். 19

நாகர்கோவில் இடைத் தேர்தலில் பெரும்வெற்றியீட்டிய திரு. காமராஜர் ஆட்சிமன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி, உதவி பிரதமர் ...

# இந்திய விடுதலைக்காக உழைத்தபிரி.பத்திரிகையாளர்

## கெய்ரோவில் மரணம்

லண்டன், பெப். 19

"நியூ ஸ்டேட்ஸ்மன்" என்ற பிரிட்டிஷ் பத்திரிகையில் 30 வருடங்களாக ஆசிரியராகப் பணியாற்றியவரும், இந்திய தேசிய சுதந்திரத்திற்காகப் போராடியவருமான திரு. கிங்ஸ்லி மார்டின் காலமாகியுள்ளார். கெய்ரோவில் மாரடைப்பால் காலமாகிய அவருக்கு வயது 71. ஐக்கிய அரபுக்குடியரசிலுள்ள இந்திய தூதுவரின் அழைப்பின் பேரில் கடந்த வாரம் கெய்ரோவிற்கு விஜயம் செய்த திரு. மார்டின் அங்கு திடீரென சுகயீனமடைந்தார்.

1927-ம் ஆண்டு "மான்செஸ்டர் கார்டியன்', பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் சேர்ந்த திரு. மார்டின் மூன்று ஆண்டுகளுக்கு பின்பு "நியூஸ்டேட்ஸ்மன்" பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். காலனித்துவத்தை வன்மையாக எதிர்த்த அவரது எழுத்து வன்மையால் இப்பத்திரிகை பிரிட்டனிலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலும் பிரபல்யமும் செல்வாக்கும் மிகுந்ததாக விளங்கிற்று. ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் பிரிட்டிஷ் ஆதிபத்தியத்தின் கீழுள்ள நாடுகளின் தேசிய சுதந்திரத் தலைவர்கள் இந்தப் பத்திரிகையை பெரிதும் விரும்பிப் படித்தனர்.

இந்திய தேசிய சுதந்திரத்திற்காக திரு. மார்டின் பெரிதும் உழைத்து வந்தார். "நியூ ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகை மூலம் அவர் போராடியஇலட்சியங்களில் இவையே பிரதானமானதாகும். "இந்திய சுதந்திரத்திற்காகப் போராடியதே நான். என் வாழ்நாளில் மேற்கொண்ட மிகப்பெரிய காரியமாகும்" என்று ஒரு தடவை அவர் கூறினார். திரு. மார்டின் காலஞ்சென்ற பாரதப் பிரதமர் நேருஜியின் நெருங்கிய நண்பர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நேருஜி மாத்திரமன்றி சுதந்திர சாம்ராஜ்ய நாடுகளின் தேசத் தலைவர்கள் பலருடன் அவர் நட்புறவு கொண்டிருந்தார்.

1960-ம் ஆண்டு இப்பத்திரிகையிலிருந்து இளைப்பாறிய அவர் தொடர்ந்தும் எழுதி வந்தார். பத்திரிகையில் எழுதியது மட்டுமன்றி அரசியலிலும், அறிவுத்துறையிலும் அரிய பல நூல்களை அவர் படைத்துள்ளார்.

# தமிழ்நாட்டில் பஞ்ச நிவாரணம்

## கருணாநிதி ஆலோசனை

சென்னை, பெப். 19

தமிழகமுதலமைச்சர் திரு கருணாநிதி தலைமையில் சென்னைகோட்டையில்பஞ்ச நிவாரண வேலைகள் மேற்கொள்ளுவதுபற்றி மகாநாடு நடைபெற்றது. இம்மகாநாட்டில் அமைச்சர்கள் மதியழகன், கோவிந்தசாமி, ஆதித்தனார், சண்முகம் ஆகியோரும் உணவு பொதுப் பணி இலாகாக்களின் அதிகாரிகளும், வடஆற்காடு, செங்கல்பட்டு கலக்டர்களும் கலந்துகொண்டனர். இம் மகாநாட்டில் நடைபெற்றவை பற்றி நிதிஅமைச்சர் மதியழகன் நிருபர்களுக்குத் தெரிவிக்கையில் பருவமழையின்மையால் தமிழ்நாட்டில் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்க பஞ்ச நிவாரண வேலைகள் நடத்தவும், பாதிக்கப்பட்ட இம்மக்கள் வாழ்வுக்கு வருமானத்திற்கான வழிவகைகள் செய்ய நீர்பாசனங்களை சீர்செய்யவும், மகாநாடு முடிவு செய்துள்ளதெனவும் இந்த பஞ்சநிவாரண வேலைகளை மேற்கொள்ள நிதி உதவுமாறு மத்திய அரசாங்கத்துக்குக் கடிதம் ஒன்றைத் தமிழக அரசு எழுதப்போவதாகவும் தெரிவித்தார்.

# தெல்லிப்பழையில்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அண்ணுவுக்கு அதிக அக்கறை''

### அஞ்சலி கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி.

கொடிகாமம், புதன்

'இலங்கையைப் பற்றியும் இலங்கை அரசியல் தலைவர்கள் பற்றியும் அறிஞர் அண்ணு அதிக அக்கறை கொண்டிருந்தார். இலங்கை அரசியல் பற்றி அவர் நுணுக்கமாக ஆராய்ந்து வைத்திருக்கிறூர், இலங்கையிலிருந்து எவர் சென்ருலும் தமது முக்கிய வேலைகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அண்ணு, அவரை அழைத்து கலந்துரையாடுவார். இதிலிருந்து அண்ணு இலங்கை தமிழ் மக்களிடம் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தார் என்பது தெரிகிறது.''

கொடிகாமம் சந்தை மைதானத்தில் அமைக்கப்பட்ட 'கலைக்கோவில், அரங்கில் நடந்த அறிஞர் அண்ணு அனுதாபக் கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசும்போது இவ்வாறு கூறினூர்.

கொடிகாமம் அண்ணுமன்றத்தின் சார்பில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு இசைப்புலவர் சி. செல்லத்துரை தலைமைதாங்கினூர்.

திரு. வி. என். நவரத்தினம் மேலும் கூறியதாவது: கடந்த டிசம்பர்மாதம் நான் தமிழ்நாடு சென்றபோது அண்ணுவைச் சந்தித்தேன். அண்ணுவை இலங்கைக்கு அழைப்பதற்கு அரசாங்கம் இடங்கொடுக்காதென்பதை அறிந்தும், நமது செல்வாக்கைப் பிரயோகித்து அனுமதி பெறலாம் என்ற நம்பிக்கையில், அண்ணுவை இலங்கைக்கு வரும்படி அழைத்தேன். அவர் சுகவீனமாயிருந்ததால், இதற்கு சம்மதிக்கமாட்டார் எனக் கருதினேன். ஆனுல் அவர் உடனே சம்மதித்துவிட்டார். உடல்நலம் சரியாக இருந்தால் இலங்கைக்குவருவதாகக் கூறினூர். இலங்கைக்கு வருவதற்கு எத்தனையோ தடவைகள் விரும்பியதாகவும், சந்தர்ப்பம் கிடைக்கவில்லையென்றும் அண்ணு கூறினூர். சம்மதம் தந்த அண்ணு இலங்கைக்கு வராமலே சென்றுவிட்டார். அவரது உடல் இங்கு வராவிட்டாலும், அவரது உள்ளம், எழுத்துக்கள், கருத்துக்கள் கொள்கைகள், லட்சியங்கள் எல்லாம் பலகாலமாக இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெற்றுவிட்டன. அண்ணு விட்டுச் சென்றபணியைநாம் தொடர்ந்து செய்ய வேண்டும். அவரின்லட்சியங்கள், கொள்கைகள் நிறைவேற நாம் பாடுபடவேண்டும்

புலவர்தமிழ்மாறன், திரு. க. கணேசலிங்கம், புலவர் பார்வதிநாதசிவம் திரு. சி. அம்பலவாணர் ஆகியோரும் பேசினர். அண்ணுவின் மறைவுக்காக 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

0 0 0

## சம்மேளனம் அனுதாபம்

சுன்ணுகம். புதன்

''திராவிடமுன்னேற்றக் கழகம் ஒரே அண்ணுவை இழந்துவிட்டது; கலையுலகம் ஒரு பெரும் கலைஞனை இழந்து தவிக்கிறது; பாரதம் ஒரு பகுத்தறிவாளனை இழந்துவிட்டது. இவ்வேளையில் கணவனின் பிரிவாற் துயருறும் உங்கட்கும் மற்றும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கிறூம்'' என்று ஒரு அவசரத் தந்தியை இலங்கை தொழில்நுட்ப மாணவர் சங்க சம்மேளனம் திருமதி அண்ணுதுரைக்கு அனுப்பியுள்ளது.

மேற்படி சங்க பொதுச் செயலாளர் சபா புஷ்பநாதன் இத் தந்தியை அனுப்பியுள்ளார்.

0 0

## செயல் திறன் மிக்கவர்

சுன்ணுகம், புதன்

அறிஞர் அண்ணுதுரை அறிவுப் பெருக்காலும், செயல திறத்தாலும் பேச்சு வன்மையாலும் பேரன்பிஞலும் கோடிக்கணக்கான மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து உயர்ந்த தலைவராகி விட்டார்.

ஸ்கந்தவரேதயாக்கல்லூரி அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் கல்லூரியில் மாணவர்களும் ஆசிரியர்களும் அண்ணுவுக்கு அஞ்சலிசெலுத்தும் போதேமேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்துவான் சி. ஆறுமுகம் பேசும்போது அறிஞர் அண்ணுகடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று மந்திரங்களையும் கொண்டு நான்கு கோடி தமிழ் மக்களையும் கவர்ந்து நல்லாட்சிபுரிந்தவர் என்றும் அவருடைய சிந்தனையும் எழுத்தும் பேச்சும் நாட்டுக்கு நல்வழி காட்டினவென்றும், தமிழகத்தில் மட்டுமன்றி அகிலமெங்கும் பரந்து வாழும் தமிழ்மக்களின்வாழ்வுக்கும் இலட்சிய புருஷராகவும் உறுதுணையாகவும் விளங்கினூர் என்றும் கூறினூர்.

ஆ. கல்யாணசுந்தரம், சிவானந்தன் உட்பட மற்றும்பலர் பேசினர்.

கூட்டமுடிவில் அமரர் அண்ணுவுக்கு இரண்டுநிமிட மௌன அஞ்சலிசெலுத்தப் பட்டது.

திரு. அ. அமிர்தலிங்கம் கூறினூர்.

ஊரெழுப் பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில், தமிழினத்தின் மத்தியிலிருந்த ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து தூங்கிய தமிழகத்தைத் துயிலெழுப்பிய அண்ணு ஒரு பல்கலைக்கழகம் என்ருர்.

திரு. அ. காராளசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திருமதி மங்கயர்க்கரசி அமிர்தலிங்கம், திருவாளர்கள் ச. கதிரவேலு, தி. கனகசுந்தரம், கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை, திரு. கா. வை. தனேஸ்வரன், திரு. சி. கணேசன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

0 0 0

## மௌனஅஞ்சலி

சுன்ணுகம், புதன்

சென்ற சனிக்கிழமை மயிலணி வடக்கு சுன்ணுகம் ஜனசக்தி சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத்தலைவர் க. செல்வநாயகம் தலைமையில் நிர்வாகசபைக கூட்டம் நடைபெற்றது அக்கூட்டத்தில் அறிஞர் அண்ணுவுக்கு இரண்டுநிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. வரும் சனிக்கிழமை அனுதாபக் கூட்டம் நடத்துவதென சபையால் தீர்மானிக்கப்பட்டது.

0 0 0

## அனுதாபம்

சுழிபுரம், புதன்

பண்ணுகம் தெற்கு இந்து சமய விருத்திச் சங்கத்தினர் காலம் சென்ற அறிஞர் அண்ணுதுரைக்குஅனுதாபம் தெரிவிக்கும்முகமாக சங்கத் தலைவர் திரு. செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டித்தனர், கூட்டம் வழக்கம் பரை அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.

0 0

## அண்ணுவுக்கு அஞ்சலி 25-ல்

உருத்திரபுரம், புதன்

இம்மாதம் 25-ம் தேதி உருத்திரபுரம் சந்தை மைதானத்தில், மறைந்த தமிழக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணுத்துரைக்கு அஞ்சலி செலுத்துமுகமாக அனுதாபக் கூட்டம் ஒன்று நடைபெறும் உருத்திரபுரம் கிராம முன்னேற்றச் சங்கத்தலைவர் திரு. சிவசம்பு இக் கூட்டத்துக்கு தலைமை தாங்குவார்,

[illegible]ரசியல் திட்டத்தில் மாற்றங்கள் செய்வதுபற்றி பாகிஸ்தான் அதிபர் அயூப் கான் இன்று நடத்த விருந்த ஆலோசனைக் கூட்டம் ந[illegible] பெறவில்லை. பேச்சுக்களில் கலந்து கொள்வதாக அறிவித்திருந்த 8எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளும் ராவல்பிண்டிக்கு வந்து சேர்வதிலுள்ள வசதியீனம் காரணமாக இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாது என்று ஜனநாயக நடவடிக்கை கமிட்டி அறித்துள்ளது. இதற்கிடையில் அயூப்கான் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொள்ள இந்தக் கூட்டு முன்னணியில் இடம் பெருத கட்சிகளின் தலைவர்கள் மறுத்துவிட்டார்கள் இதனுல் இந்தப் பேச்சுகளில் பெரிய முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

### பூட்டோ மறுப்பு

அயூப்கான் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொள்ள முன்னுள் வெளி உறவு அமைச்சர் திரு. சுல்பிகான் அலி பூட்டோ மறுத்துள்ளார். 'மக்கள் ஆட்சியில் ஒருமாறுதலையே விரும்புகிறூர்கள். சலுகைகளையல்ல. இந்த மாறுதலை இரண்டு முறைகளில் ஏற்படுத்தலாம். ஒன்று புரட்சி, மற்றது முறையான தேர்தல்'' இவ்வாறு திரு. பூட்டே அறிவித்துள்ளார்.

மஹபாளுபாசானி, [illegible]பார் மாஷல் அஸ்ஹர் கான், லெப்டினன்ட் ஜெனரல் ஆஸம்கான், நீதிபதி செய்யத்மகுபூ முஸீத் ஆகிய மற்றத் தலைவர்களும் அயூப் கானின் அழைப்பை[illegible]ற்று ஆலோசனைகளில் கலந்து கொள்ள மறுத்துள்ளனர்.

சிறையிலிருக்கும் திரு. முஜிபுரகுமான் 'பரோலில்' வந்து பேச்சுக்களில் கலந்து கொள்ளமுடியாது என்று அறிவித்துள்ளார்,

இந்த 5 தலைவர்களும் பேச்சுக்களில்பின்னர்கலந்து கொள்வார்கள் என்று அரசாங்கத்தரப்பில் எதிர்பார்க்கப்படுகின்றது.

### குழப்பம் தொடர்கிறது

நேற்று மீண்டும் பாகிஸ்தானில் பல இடங்களிலும் குழப்பங்கள் இடம் பெற்றன. கராச்சியில் நேற்று இரண்டாவது தடவையாக ராணுவம் அழைக்கப்பட்டது. ராகசாஹி என்ற இடத்தில் ஏற்பட்ட ஒரு குழப்பத்தில் மாணவர்கள் பலர் காயமடைந்தார்கள். ஆயிரக்கணக்கான மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். இதில் ஒருபேராசிரியர் உட்பட இருவர் பலியானூர்கள். நேற்று நடைபெற்ற குழப்பங்களில் 6பேர்கொலையாகியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

## 'மக்கள் ஆதரவின்றி ஆட்சி பயனளிக்காது'

### இந்திய ஜனுதிபதி கருத்து

புதுடில்லி, பெப். 19

புதுடில்லி ஆட்சிமன்றத்தின் 'பட்ஜட் கூட்டத் தொடரை ஆரம்பித்து ஜனுதிபதி சாகீர்ஹுசேன் உரை நிகழ்த்தினூர்.

''சரித்திரத்திலேயே மிக மோசமான காலமாகிய பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இப்பொழுதுதான் மீட்சி பெற்றிருக்கிறூம். மனம்தளராது கஷ்டங்களையெல்லாம் சகித்துவந்த மக்களின் ஒத்துழைப்பு இன்றி மத்திய மாநில அரசுகளின் அலுவல்கள் பயனுள்ளனவாக முடியாது. விவசாயம் தொழில் ஆகிய துறைகளில் முன்னேற்றமும் விலைவாசிகளின் ஸ்திரநிலையும் ஏற்பட்டுள்ளது. சென்ற ஆண்டுகளிலும்பார்க்க 60 லட்சம் தொன் தானியஉணவு உற்பத்தி செய்யப்பட்டதோடு கைத்தொழிற் பயிர்களின் உற்பத்தியும் கூடுதலாக ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டில் பல இடங்களில் இயற்கையின் தாக்குதலால் விவசாயம் பாதிக்கப்பட்டபொழுதும் சென்றவருடம்போல் உணவு உற்பத்தி சிறந்த முறையில் காணப்படும்'' எனக் கூறிய ஜனுதிபதி இடைத்தேர்தல்கள் பற்றிக் குறிப்பிடுகையில் மாநிலங்களில் நிலையான அரசாங்கங்கள் சகல அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்புடன் அமையும் எனத்தான் நம்புவதாகத் தெரிவித்தார்.

## தொலைபேசி தொடர்பு

சுழிபுரம், புதன்

மானிப்பாய் கிராமசபைக்குப் புதிய தொலைபேசித் தொடர்பு இணைக்கும் வேலைகள் விரைவில் நடைபெறவிருக்கின்றன.

[illegible] தேர்தலில் பெரும்வெற்றியீட்டிய திரு. காமராஜர் ஆட்சிமன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி, உதவி பிரதமர் மொரார்ஜிதேசாய் மற்றும் காங்கிரஸ் பிரமுகர்கள் பலரும் இவரின் பதவியேற்பின் போது பிரசன்னமாயிருந்தனர். ஆட்சிமன்றத்தில் காங்கிரஸ் பிரமுகர்கள் திரு. காமராஜருக்குத் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். நேரு தொகுதியில் வெற்றிபெற்ற ஜனேசுவர் மிஸ்ராவும் திரு. காமராஜர் பதவியேற்ற அன்று பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். காமராஜர் ஆங்கிலத்தில் சத்தியப்பிரமாணம் செய்தார்.

## யு. எஸ்—சீனு ராஜியபேச்சு இல்லை

வார்ஸோ, பெப். 19

அமெரிக்காவுடன் ராஜிய பேச்சுக்களை வார்ஸோவில் ஆரம்பிப்பதை சீனு ரத்து செய்திருக்கின்றது. நெதர்லாந்தில் முன்னர் சீன பொறுப்பதிகாரியாக விருந்த சீனருக்கு அமெரிக்கா அடைக்கலம் கொடுத்ததற்காக சீனு இந்த நடவடிக்க எடுத்திருக்கிறது.

சீனுவும் அமெரிக்காவும் வார்ஸோவில் இருநாட்டுத் தூதுவர்களுக்கிடையில்ராஜீயப்பேச்சுகளை ஆரம்பிப்பதற்குமுன்னர் இணங்கியிருந்தனர்.

## நியூசிலாந்து பாதுகாப்புப்படை

லண்டன், பெப். 18

1971-ம் ஆண்டுக்குப் பின் தென் கிழக்கு ஆசியப் பகுதியில் நியூசிலாந்து பாதுகாப்புப் படையொன்றை நிறுத்தவிருக்கிறதுபிரிட்டிஷ் படை அங்கிந்து விலகுவதைத் தொடர்ந்து நியூசிலாந்துதற்பாதுகாப்பைமுன்னிட்டு படையை நிறுத்த விருக்கிறதாம். இதுபற்றிய தனது அரசாங்கத்தின் முடிவை நியூசிலாந்து பிரதமர் கோலியோக் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் அறிவிப்பார் என்று அறிவிக்கப்பட்டது.

## தவறு

'இலங்கையில் ஏழு மாகாணங்களாம்' என்ற தலைப்பில் சென்ற செவ்வாய்க்கிழமை 'ஈழநாட்'டில் வெளியாகிய செய்தி சரியல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றூம். 7 கண்டங்கள் என அது இருக்கவேண்டும். தவறுக்கு வருந்துகின்றூம்.

காலஞ்சென்ற பாரதப் பிரதமர் நேருஜியின் நெருங் தமிழக அரசு எழுதப்போவ தாகவும் தெரிவித்தார்.

## தெல்லிப்பழையில் நவீன பாலம்

அளவெட்டி, புதன்

இலங்கையின் 22 மாவட்டங்களிலும் அமைக்கப்படவிருக்கும் நவீன பாலங்களில் யாழ். மாவட்டத்துக்கான பாலம் தெல்லிப்பளையில் அமைக்கப்பட விருக்கிறது.

கிராமங்களிடையே போக்குவரத்து வசதிகளை சீர்ப்படுத்தும் வகையில் இலங்கையிலுள்ள 22 மாவட்டங்களிலும் நவீன பாலங்கள் அமைக்கும்திட்டமொன்றை உள்ளூராட்சி அமைச்சு வகுத்துள்ளது. இத்திட்டத்துக்கான உத்தரவை உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா பிறப்பித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் நவீன பாலங்களில் யாழ். மாவட்டத்துக்கான பாலத்தை தெல்லிப்பழை கிராமசபை எல்லைக்குள் அமைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பாலம் தெல்லிப்பழை கிராமசபை எல்லைக்குட்பட்ட தெல்லிப்பழை --அளவெட்டி வீதியில் அமைக்கப்படவிருக்கிறது.

பால அமைப்பு வேலைகள் யாவும் நீர் வழங்கல் வடிகால் பகுதி மாநிலப் பொறியியலாளர் திரு. சி. புவனேஸ்வரன் பார்வையில் இயங்கும்.

மார்ச் 22-ம் திகதி நவீன பாலங்கள் திறந்துவைக்கப்படுமாம்.

தெல்லிப்பழை கிராமசபை எல்லைக்குட்பட்ட பாலத்தை காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் திறந்துவைப்பார்.

## பித்துக்குளி முருகதாஸ் யாழ்ப்பாணம் வருவார்

பம்பலப்பிட்டி, புதன்

சுவாமி பித்துக்குளி முருகதாஸ் நேற்று முன் தினம் விமானத்தில் கொழும்பு வந்துசேர்ந்தார். நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தின் அழைப்பின் பேரில் இவர் இங்கு வந்துள்ளார். ஆத்மஜோதி நிலையத்தைச் சேர்ந்த நா. அருமைநாயகம் உட்படப் பலர் முருகதாஸ் சுவாமிகளை மாலைசூட்டி வரவேற்றனர். மார்ச் மாதம் 8-ந் திகதிவரை இலங்கையில் தங்கும் இவர் யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் பக்திப் பஜனை செய்வார். கதிர்காமம், திருக்கேதீச்சரம் ஆகிய ஸ்தலங்களுக்கும் அவர் செல்வார்.

'பக்திகொள்வதன் மூலம் அமைதியைப் பெறலாம். ஆசையை விட்டு அன்பைப் பெருக்குங்கள். ஒழுக்கமான வாழ்வே உயர்வுதரும்' என்று பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகள் இங்கு வந்துசேர்ந்ததும் கூறினூர்.

## இலவச சங்கீத பயிற்சி

சித்தங்கேணி, புதன்

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடியில் சிவகான சபா அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது அண்ணுமலைப்பல்கலைக் கழகத்தில் பட்டம்பெற்ற இசை ஆசிரியர்களால், அங்குள்ள மாணவ மாணவிகளுக்கு இலவசமாக கர்னுடக சங்கீதம் பயிற்றுவிக்கப்படுகிறது.

## நியமனம்

உடுவில், புதன்

சுன்ணுகம் பட்டினசபையின் ஆதரவில் இயங்கிவரும் பொதுசன நூல்நிலையத்துக்கு இம்மாதம் 10-ம் திகதியிலிருந்து வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செல்வி இரஞ்சிதமலர் வேலுப்பிள்ளை நூலகப் பொறுப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

## பூநகரி கி. ச. அங்கத்தவர் கோருவார்

யாழ்ப்பாணம், வியாழன்

பூநகரிப் பகுதியிலுள்ள வீதிகளுக்கு பெயர் சூட்ட வேண்டும்.

இவ்வாறு ஒரு தீர்மானத்தை பூநகரி கிராமசபை 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. கே. தனபாலசிங்கம் அடுத்தகூட்டத்தில் கொண்டுவர விருக்கின்றூர்.

(ந. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

'நமது உழைப்பின் பயனை நாம் எதிர்பார்க்காமல் இருக்கலாம். ஆனால் நல்ல செயல் இறுதியில் பலனளித்தேதீரும்என்பது எனதுஉறுதியான நம்பிக்கை.'

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 9-ந் திகதி
(20 - 2 - 69)


## எல்லோருக்கும் 'பென்ஷன்'

இலங்கையிலே இப்பொழுது அரசாங்க ஊழியர்உள்ளிட்டு சில அதிர்ஷ்டக்காரருக்குத்தான் 'பென்ஷன்' வசதி இருக்கிறது. பல்லாண்டுகள் கமக்காரராகவோ, தோட்டத் தொழிலாளராகவோ, கடற்றொழிலாளராகவோ உழைத்து உழைத்து உடல் தளர்ந்தவர்கள்,வயோதிபத்திலே உதவி எதுவுமின்றி பிறர்தயவைநாடவும், பிச்சைக்காரராகஅல்லது திக்கற்ற அனாதைகளாகவும் தவிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலுள்ளனர். இந்த அவலநிலையை மாற்றி, நாட்டில் எல்லாருக்கும் 'பென்ஷன்' வசதி கிடைக்கக்கூடிய புதியதொரு திட்டத்தை இலங்கை இன்ஸூரன்ஸ் கூட்டுத்தாபனம் தயாரித்துள்ளது, பலராலும் நன்றியுடன் வரவேற்கத்தக்கதாகும்.

இத்திட்டப்படிஒருவர்வேலையில் சேரும்போது ஆயுளில் ஒரே ஒருமுறை ரூபா 500'பிரிமியம்' செலுத்தி 'பென்ஷன் பொலிஸி' எடுத்துக்கொள்ளலாம். பின்பு வருடாவருடம் 'பிரிமியம்' தொகை எதுவும் செலுத்தவேண்டியதில்லை. வருடாவருடம் அவர் கணக்கில் சுமார் நூறுரூபாய் வரை சேரும். 55 அல்லது 60 வயதிலே அவர் ஓய்வு பெறும்போது அவருக்குசுமார்நாலாயிரம் ரூபாய் வரை மொத்தமாககிடைக்ககூடியதாகஇருக்குமாம். மொத்தமாக ஒருவரிடம் ரூ.500 கிடைக்கமுடியாவிட்டால், அவர் மக்கள் வங்கியில் சிறுகச்சிறுகப் பணம் சேர்த்து, ஐநூறு ரூபா சேர்ந்த பின் அதைப் பென்சன் பொலிஸிக்கான 'பிரிமிய'மாக செலுத்தலாமென்றும் இடையிலே மரணம் ஏற்பட்டால், லாபத்தொகையுடன் கட்டியபணத்தையும் சேர்த்து அவருடைய வாரிசுதாரிடம் சேர்ப்பரென்றும் தெரிகிறது.

இந்தமாதிரியான ஒரு திட்டம் சரிவர நிர்வகிக்கப்பட்டு நடப்பின், எளிய நடுத்தர குடும்பத்தினருக்கு அதுபெரியவரப்பிரசாதமாகும்.

பிரிட்டன் முதலிய பலநாடுகளிலேவயோதிபப்பென்ஷன் முறை இருப்பதால், வயதான காலத்தில்யாரும் கதியற்றுத் தவிக்கத் தேவையில்லை. அவ்வித சமூக நலனளிக்கும் ஏற்பாடு இலங்கையில் இதுவரை இல்லாத குறையை, இப்புதியதிட்டம் நீக்கக்கூடியதாக இருக்கும். மேலை நாடுகளில் வேலையற்றோர் இன்ஷூரன்ஸ், சுகாதார இன்ஷூரன்ஸ், குழந்தைகளின் பராமரிப்புக்கான உதவித்திட்டம் முதலிய சமூக நலனுக்கான ஏற்பாடுகள் இருப்பதால், பொதுமக்களில்யாரும் எந்த நிலையிலும் பட்டினி கிடக்கவோ, பிச்சை எடுக்கவோ வேண்டியஅவசியமில்லை. பிற்காலவாழ்க்கைகுறித்து அவர்கள் அதிக கவலையின்றி நிம்மதியாக வாழ வாய்ப்புண்டு.

நம் இலங்கையிலே அவ்வித சமூக நலத்திட்டங்கள் ஒன்றும் ஏற்படாத நிலையில் இந்த 'பென்ஷன் திட்டம்' பெரிதும் உதவக்கூடும். உழைக்க முடியாத வயோதிபத்தில் ஒருவருக்கு நாலாயிரம் ரூபாவரை கிடைப்பதாயின், அவர் அதைக்கொண்டு பிற்கால ஜீவனத்தை கவலையின்றியும் மரியாதையாகவும் நடத்த உதவியாக இருக்கும். இப் புதிய திட்டமூலம் பெரும் தொகை கூட்டுத்தாபனத்திடம் சேரக்கூடும். அப்பணத்தை லாபகரமாகவும் மக்களுக்கு நன்மையளிக்கக் கூடியதுமான வீடுகட்டும் திட்டம், புதிய வேலைவாய்ப்புத் திட்டம் முதலியவற்றில்பயன்படுத்துவதாயின், இந் நாட்டில் மக்கள் அதிக நிம்மதியாக வாழ வழி ஏற்படும்.

## இ. போ. ச. 'ஊழல்கள்'

இ. போ. ச. எனும் இலங்கை போக்குவரத்து ... பின் நிலைமை எவ்வளவு படுமோசமாகியுள்ள தென்

## விசாரணை ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, புதன்

அடிகாயங்களுக்குள்ளாகி பதினறு நாட்களின் பின்னர் இறந்தவரான புலோலி தெற்கைச் சேர்ந்த கே, விசுவலிங்கம் என்பவரின் மரணத்தையொட்டி அதே இடத்தைச் சேர்ந்த சிவபாக்கியலோகேஸ்வரி, ஆறுமுகம் கைம்பெண் முத்தம்மா, இரத்தினேஸ்வரி ஆகியோர் மீது பருத்தித்துறை பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது மாஜிஸ்திரேட் எதிரிகளை முன்னைய பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு வழக்கை அடுத்த மாதம் மூலாம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

## பஞ்சாப்பில் கூட்டணி மந்திரிசபை

சண்டிகார் பெப். 19

பஞ்சாப் மாநிலத்தில் அகாலிதளம், ஜனசங்கம் ஆகிய கட்சிகளின் கூட்டணி மந்திரி சபை பதவியேற்றுள்ளது. இககூட்டணி மந்திரி சபையின் முதல்மந்திரியாக திரு. குர்னும்சிங் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். இம்மந்திரி சபையில் சோகன்சிங்பாசி, ஆத்மராம் கிருஷ்ண்லால், பால்ராம்ஜிதாஸ் ஆகிய நால்வரும் இடம்பெற்றுள்ளனர். இந்த நான்கு மந்திரிகளும் 17-ம் திகதியன்றே பதவியேற்றனர்.

## பிரிவுபசாரம்

அளவெட்டி, புதன்

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் பலகாலமாக கடமையாற்றிய நான்கு ஆசிரியஆசிரியைகள் இடமாற்றம் பெற்றதையொட்டி வித்தியால மாணவர்கள் ஒரு பிரிவுபசார விழாவை நடாத்தினர்.

இடமாற்றமாகிச் செல்லும் திரு. எஸ். கந்தசாமி திருமதி பி. மார்க்கண்டு, திருமதி நடராசா. திருமதி ஆறுமுகம் ஆகியோருக்கு வித்தியாலய மண்டபத்தில் ஆசிரியர் திரு. மயில்வாகனம் தலைமையில் இப்பிரிவுபசாரவிழாவை நடத்தினர்.

0 0 0

வல்வெட்டித்துறை, புதன்

கடந்த மாதம் மாற்றலாகிச் சென்ற ஆசிரியர்களுக்கு தொண்டமானறு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களால் பிரியாவிடை

# உன் இதயத்தை தந்திடு அண்ணா!

### தமிழக முதல்வர்
### கலைஞர் மு. கருணாநிதி

(அண்ணா மறைவையொட்டி கலைஞர் மு. கருணாநிதி இயற்றியகண்ணீர் அஞ்சலிக் கவிதை இது. சென்னை வானொலியில் அவர் இந்தக் கவிதையை அரங்கேற்றினர்)

(நேற்றைய தொடர்ச்சி)

அந்த அன்னை குலம் போற்றுதற்கு
ஒளவைக் கோர் சிலை
அறம் வளர்த்த கண்ணகிக்கோர் சிலை.
வளையாத நெஞ்சப் பாரதிக்கும்
வணங்காமுடி பாரதி தாசருக்கும் சிலை
வீரமா முனிவருக்கும் சிலை
கால்டுவெல் போப்புக்கும் சிலை கம்பருக்கும் சிலை
தீரமாய்க் கப்பலோட்டிய தமிழர்க்கும் சிலை
திக்கெட்டும் குறள் பரப்ப திருவள்ளுவர்க்கும் சிலை
பத்துசிலை வைத்ததினுல்—அண்ணன்
தமிழின் பால்
வைத்துள்ள
பற்றுதலை உலகறிய;
அந்த அண்ணனுக்கோர் சிலை
சென்னையிலே வைத்தபோது...
ஆட்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்......
ஆணையிடுகிறார் எம் அண்ணா என்றிருந்தோம்
அய்யகோ; இன்னும்
ஓராண்டே வாழப் போகிறேன் என்று அவர்
ஓர் விரல் காட்டியது இன்றன்றோ
புரிகிறது

எம் அண்ணா... இதய மன்னா...
படைக்கஞ்சாத் தம்பியுண்டென்று
பகர்ந்தாயே;
எமை விடுத்துப் பெரும் பயணத்தை
ஏன் தொடர்ந்தாய்...
உன் கண்ணொளியின் கத கதப்பில்
வளர்ந்தோமே;
என் கண்ணெல்லாம் குளமாக
ஏன் மாற்றி விட்டாய்?
நிழல் நீதான் என்றிருந்தோம்;நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப் போய்விட்டாய்;
நியாயந்தானா?
கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம்
முத்தல்ல;
நான் தானடா நன்முத்து எனச்
சொல்லி
...ற்கரையில் உறங்குதியா?......
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?
விரல் அசைத்து எழுத்துலகில்
விந்தைகளைச் செய்தாயே அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?
கண்மூடிக் கொண்டுநீ சிந்திக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸாரைக்கண்டதும்

## மீனையும் வள்ளத்தையும் விட்டு ஓடிவிட்டார்களாம்

நல்லூர், புதன்

டைனமைட் வைத்து மீன்பிடித்தவர்கள் பொலிசாரைக் கண்டதும் வள்ளத்தையும், பிடித்த மீன்களையும் விட்டு ஓடிவிட்டார்களாம். இந்தச் சம்பவம் கரையூர் கடலில் நடைபெற்றுள்ளது.

கரையூர் பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காக ஸ்தலத்துக்கு வந்தபோது அவர்கள் 300 ருத்தல் மீனையும், வள்ளமொன்றையும் விட்டுச் சென்றுவிட்டார்களாம்.

கரையூர் பொலிசார் மீன்களையும் வள்ளத்தையும் கைப்பற்றி பொலிஸ்நிலையத்துக்குக் கொண்டுவந்துள்ளனர். மீன்களை பொலிசார் யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைத்தனர். சட்ட வைத்திய அதிகாரி டைனமைட் வைத்துப் பிடித்த மீன்களென அவரது பரிசீலனையின் பின் தெரிவித்தார்.

மீன்பிடி இலாகாவினுல் கொடுக்கப்பட்டிருந்த 'கூனுஸ்ஸ' என்ற இயந்திர வள்ளம் கடந்த ஆறுமாத காலமாக பழுதடைந்திருப்பதாலேயே இப்படியானவர்களை பொலிஸார் கைது செய்ய முடியாமல் திண்டாடுகின்றனர்.

# பழைய பஸ்ஸினுள் புதிய உதிரிபாகங்கள்

அளவெட்டி, புதன்

சுமைதாங்கிமூலம் அனுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட பழைய பஸ்ஸில் கண்டுபிடிக்கப்பட்டதாம் பல ஆயிரம் ரூபாய் பெறுமதியான புதிய பஸ் உதிரிப் பாகங்கள்.

பழுதடைந்த பஸ்ஸை திருத்துவதற்காக சுமைதாங்கி மூலம் யாழ். பஸ் டிப்போவிலிருந்து அநுராதபுரத்துக்கு எடுத்துச் செல்ல நேற்று ஆயத்தமானபோது உயர் அதிகாரிகளிட மிருந்து வந்த ஒரு இரகசியத் தகவலைத் தொடர்ந்து சுமைதாங்கியும் பஸ்ஸூம் சோதனை செய்யப்பட்டது. அப்போது சுமைதாங்கிச் சாரதியின் இருக்கையின் கீழும், மற்றும் இடங்களிலும், பஸ்ஸிலும் இருந்து பல ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய பஸ் உதிரிப்பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டனவாம்.

இப் புதிய உதிரிப் பாகங்கள் பழைய பஸ்ஸில் காணப்பட்டமைக்குக் காரணம் விஷமிகளால் செய்யப்பட்ட சதிவேலையாக இருக்கலாம் என அதிகாரிகள் கருதுகின்றனர். இதுபற்றி பஸ் டிப்போ உயர்தர அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 35 கோடி ரூபாய் செலவில் காலியில் மீன்பிடி துறைமுக

காலி, புதன்

35 கோடி ரூபா செலவில் கட்டப்படவிருக்கும் காலி மீன்பிடித் துறைமுக நிர்மாண வேலையை சென்ற வாரம் கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன ஆரம்பித்து வைத்தார். 30 ஆழ் கடல் மீன்பிடிக் கலங்களையும், 25 சிறிய மீன்பிடிக் கலங்களையும் உள்ளடக்கத் தக்க வகையில் இத் துறைமுகம் அமைக்கப்படவிருக்கிறது. இந்துசமுத்திரத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பிறநாட்டு மீன்பிடி கலங்கள் தங்கி இத் துறைமுகத்தில் தங்கள் தக்க வகையிலும் இதுஅமையும். இதன் நிர்மாண வேலையைக் கொழும்பு துறைமுக கமிஷனும் பிரான்ஸ் ஸ்தாபன மொன்றும் பொறுப்பேற்றுள்ளது. 14 ஏக்கர் நீர்ப்பரப்பைக் கொண்டுள்ளதாக அமையும் இந்த மீன்பிடித் துறைமுகத்தில் திருத்த வேலைக்கான வேலை நிலையம், மீன் சேமிப்பு நிலையம் ஆகியனவும் அமைக்கப்படும்.

## கல்வி சுவீப்...

(1-ம் பக்கத் தொடாச்சி)

090001264 06P006608

## ஐயாறன் எழுதுவது

தெருத்தெருவாகப் பேப்பர் விற்ற ஒரு பையன், தமிழகத்திலே ஒரு பேராசிரியராகி இந்தியாவிலேயே தலைசிறந்த ஆறு விஞ்ஞானிகளுள் ஒருவராகத் திகழ்கிறாராம்! இவ்வாரம் வந்த 'ஆனந்தவிகட'னில் இந்த ருசியான உண்மைக்கதை படங்களுடன் வெளியாகியுள்ளது மனதைப் பெரிதும் கவர்ந்தது.

சுமார் 20 வருடங்களுக்கு முன் மதுரையிலே சுந்தரராஜன் என்ற 13 வயதுள்ள பையன் வீடுவீடாக 'தமிழ்நாடு' பத்திரிகையை விநியோகித்துவந்தான். வாரா வாரம் அதற்கான பணம் வசூலித்துச்செல்வது வழக்கம். பணம் வசூலிக்க ஒருவர் வீட்டுக்குள் சென்றபோது, அந்த வீட்டுக்காரர் (நரசிம்மன்) பையனை வீட்டுக்குள்வரப்படாதென்றும், வாசலில் இருந்தபடியே பணம் வாங்கிச்செல்ல வேண்டுமென்றும் கண்டித்தார். ஒரு நாள் அதே பையன் வீட்டின் இரண்டாவது உள் அறையில் சோபாவிலேஉட்கார்ந்திருந்ததைக் கண்டதும், வீட்டுக்காரருக்குக் கோபம் தாங்கவில்லை. 'ஏண்டா உனக்கு என்ன சொன்னேன்!...' என்று சொல்லி கன்னத்தில் அறைந்து, காதைப் பிடித்து இழுத்து, வாசலில் விட்டாராம்!

'அச்சமயம் எதிர்பாராத ஒரு காரியம்நடந்தது. எஸ். எஸ்.எல். ஸி. படிக்கும் என் புதல்வன் வீட்டுக்குள்ளிருந்து ஓடிவந்து, 'என்ன அப்பா அவனை அடித்துவிட்டீர்கள். எனக்குக் கணக்குச் சொல்லிக்கொடுப்பதற்காக நான்தான் அவனை வீட்டுக்குள்அழைத்துவந்தேன்' என்றதும் திகைத்துவிட்டேன். ஒரு பேப்பர்காரப் பையன் எஸ் எஸ்.எல்.ஸி. படிக்கும் என் மகனுக்குக் கணக்குச் சொல்லிக் கொடுப்பதா?' என்று அவர்திகைத்தாராம்.

'அப்பா, அந்தப் பையன் சுந்தரராஜன் என்னுடன் படிக்கிறான்.ஏழைப்பையன். பேப்பர் போடும் வேலை செய்து அவ் வருவாயைக் கொண்டு படிக்கிறான். எங்கள் வகுப்பிலே அவன்தான் மிக நன்றாகப் படிப்பவன்' என்று என் மகன் கூறியதும் என் கண்ணில் நீர் நிறைந்தது. அந்தச் சிறுவனை அப்படியே கட்டி அணைத்துக் கொண்டேன். மன்னிப்புக் கேட்டேன். அன்று முதல்

கட்டியபணத்தையும் சேர்த்து அவருடைய வாரிசுதாரிடம் சேர்ப்பரென்றும் தெரிகிறது.

டில் மக்கள் அதிக நிம்மதியாக வாழ வழி ஏற்படும்.

## இ. போ. ச. 'ஊழல்கள்'

இ. போ. ச. எனும் இலங்கை போக்குவரத்து சபையினருக்குச் சொந்தமான வரஹிரா தொழிற்சாலையில் நாளொன்றுக்கு பத்தாயிரம் ரூபாவரை களவுபோய் நஷ்டமேற்படுகிறதாம்! அங்குள்ள தொழிலாளர் ஒவ்வொருவரையும் திருடர்களென்றே சந்தேகத்துடன் நடத்தவேண்டியுள்ளதாக அந்த ஸ்தாபனத்தின் காவலர்கள் கருதுவதாகத் தெரிகிறது. இந்தக் கூற்றில் ஓரளவும் உண்மையாயின், இ. போ. ச. நிலைமை பெரிதும் கவலையளிக்கக்கூடியதாகும்.

சில வாரங்களுக்கு முன் அந்தத் தொழிற்சாலைக்குள்ளாக ஒரு தொழிலாளி கஞ்சா மூடையை எடுத்துச் சென்றபோது, இ. போ. ச. காவலர் ஒருவர் அவரைத் தடுத்ததும், பலர் சேர்ந்து அந்தக் காவலரை நையப் புடைத்து விட்டார்களாம். டயர் ஒன்றை யாரோ கள்ளத்தனமாக வெளியே எடுத்ததைத் தடுத்த ஒரு காவலரை தொழிலாளர் அவ்விதமே அடித்துநொறுக்கியதாகக் கூறப்படுகிறது. அங்குள்ள சுமார் 6000 தொழிலாளரும் கட்டுப்பாடாக எதிர்ப்பதால், தாங்கள் பல சமயம் பெண்களுக்கான கக்கூஸிலே பதுங்கி தங்களைக் காத்துக்கொள்ள வேண்டியுள்ளதாகவும் மூன்று வருட காலமாக இதே கதைதான் என்றும் காவலர் கூறுவதைப் பார்ப்பின் நிலைமை எவ்வளவு படுமோசமாகியுள்ளதென்பது விளங்கும்.

இ. போ. ச. ஊழியரில் எல்லாரும் இப்படியென்று கூறமுடியாதுதான். ஆனால் ஒருசிலர் செய்யும் இவ்விதத் தகாத காரியங்கள், எல்லாருக்கும் கெட்ட பெயரளித்து, ஸ்தாபனத்தையே குட்டிச்சுவராக்கக்கூடியதாக இருக்கிறது. பஸ்சேவையை தேசஉடைமையாக்கியபோது பல தொழிலாளர் சங்கங்களும் தலைவர்களும்இதை பெரிதும் வரவேற்று ஒத்துழைப்பதாகத் தெரிவித்தனர். இ. போ. ச. வைப் பற்றி பொதுமக்களுக்கும் அதிக குறையுண்டு.

தேசியமயமாக்குவதில் பொதுமக்களின் நம்பிக்கையும் பெரிதும் குறைந்துவிட்டது. இவ்வித நஷ்டத்தையும், கேடுகளையும், வெகுகாலம் சகிக்கமுடியாது. ஆகையால் சம்பந்தப்பட்ட தொழிலாளர் சங்கங்களும், தலைவர்களும் இதைப்பற்றி கவனமெடுத்து, இந்த ஊழல்களை நீக்கி, மேலான முறையில் இந்த நிர்வாகம் நடக்கத் தக்க யோசனைகளைக் கூறி ஒத்துழைக்க பொறுப்புடன் முன்வரவேண்டும். தொழிலாளருக்கும் நிர்வாகிகளுக்கும் மேலான உறவும் ஒத்துழைப்பும் இல்லாவிடில், இ. போ. ச. வைத் தொடர்ந்து பொதுமக்களின் நன்மைக்கான முறையில் நடத்த முடியாது போகும்.

## இவர்கள்மீது பொலிஸார் கவனம்செலுத்துவர்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண நகரில் இரவு பகலாக அலைந்து திரியும் பைத்தியங்கள் எந்தநேரத்திலும் அரசாங்க மனநோய் அஸ்பத்திரிக்கு அனுப்பப்படலாம். இதற்கான நடவடிக்கையை வடபகுதி பொலிசார் மேற்கொண்டுள்ளனர். பைத்தியங்களுக்கு அவர்களது நோயிலிருந்து நிரந்தர விடுதலை அளிக்கும் பொலிஸாரின் இத்திட்டத்தில், ஏற்கனவேயே ஒருவர் இடம்பெற்று இப்போது அங்கொடை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

பொதுமக்களுக்குஇடைஞ்சலைக் கொடுக்கும் இந்தப் பைத்தியக்காரர்களின் தொகை சுமார் 20-க்கும் மேலாக யாழ்ப்பாண நகரில் அதிகரித்துள்ளதாக பொலிசாருக்குக் கிடைத்துள்ளதகவல்களைத் தொடர்ந்தே பொலிஸார் இந்த வேலையை ஆரம்பித்துள்ளதாக உயர்தர பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

கைதுசெய்யப்படும் பைத்தியங்கள், சட்டவைத்திய அதிகாரியால் சோதனைக்குட்படுத்தப்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னரே அங்கொடைக்கு அனுப்பி வைக்கப்படுவர். (கா-நி.)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 20-ம்திகதிஅச்சிட்டுவெளியிடப்பட்டது.

0 0 0

வல்வெட்டித்துறை, புதன்

கடந்த மாதம் மாற்றலாகிச் சென்ற ஆசிரியர்களுக்கு தொண்டமானாறு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களால் பிரியாவிடை வைபவமொன்று நேற்று வித்தியாலய மண்டபத்தில் நடத்தப்பட்டது.

முன்னாள் அதிபர் வி. தம்பிப்பிள்ளை, ஆர். இராசரத்தினம், ஈ. பஞ்சநாதன் ஆகியோரே வெவ்வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றவர்கள். இப்பிரியாவிடை வைபவத்திற்கு ஆசிரியர் எம். வரதுங்கம் தலைமை வகித்தார்.

## காரைநகரில் அஞ்சலி

காரைநகர், வியாழன்

அறிஞர் அண்ணா மறைவுக்கு காரைநகர் களபூமி சனசமூக நிலையத்தினர் அனுதாபக் கூட்டமொன்றை இன்று மாலை 6 மணிக்கு நடத்தவிருக்கின்றனர். களபூமி மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறும் இக்கூட்டத்துக்கு மேற்படி நிலையத் தலைவர் திரு. கு. காராளசிங்கம் தலைமைதாங்குவார். காரைநகர் கிராமசபைத் தலைவர் திரு. கா. க. விசுவலிங்கம் ஜே. பி. உட்பட பலர் அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்துவர்.

## 'சத்தியாக்கிரகம் நடத்துவோம்'

முல்லைத்தீவு, புதன்.

முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் கங்காணிமார் முதல் சகல சிறு தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து 1968 ஆண்டு ஐப்பசி மாதம் முதல் இதுவரை வீட்டுவாடகைப் பணம், பஞ்சப்படி, மேலதிக நேரச் சம்பளங்கள் வழங்கப்படவில்லையென்றும் இவற்றை இம்மாதம் 26-ம் திகதிக்கு முன்தர வேண்டும் என்றும் தவறினால் 28-ம் திகதி அடையாள சத்தியாக்கிரகம் ஆரம்பிப்போம் என்றும் வவுனியா சுகாதார சேவை சுப்பிரீண்டனுக்கு அனுப்பிய மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

...ற்கரையில் உறங்குதி யா?......
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?
விரல் அசைத்து எழுத்துலகில்
விந்தைகளைச் செய்தாயே; அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?
கண்மூடிக் கொண்டுநீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்...
இன்று......
மண்மூடிக் கொண்டுன்னை பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை!
கொடுமைக்கும் முடிவு கண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதையம்
கடற்கரையில் காற்று
வாங்கியது போதுமண்ணா;
எழுந்துவா எம் அண்ணா......
வரமாட்டாய்; வரமாட்டாய்;
இயற்கையின் சதியெமக்குத் தெரியும் அண்ணா...
நீ
இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில்...
இரவலாக உன் இதயத்தை தந்திடண்ணா...
நான் வரும்போது கையோடு கொணர்ந்து
அதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா......

முற்றும்

## 'வாழ்வை பண்படுத்தும் அரிய சாதனம்'

பம்பலப்பிட்டி, புதன்

நாடகம் பொழுதுபோக்கு மட்டுமன்றி மக்கள் வாழ்வைப் பண்படுத்தும் அரிய சாதனம். நாடகம் வளர்ச்சியடைய இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் வளரும். முடியுடை வேந்தரும் போற்றி வளர்த்தமுத்தமிழிலொன்றாகிய நாடகம் இடைக்காலத்தில் வளர்ச்சி குன்றியது. ஆனால் இன்று உலகிலே ஒரு மறுமலர்ச்சி தோன்றியிருக்கின்றது. பல நாடகங்கள் மேடையேறுகின்றன. எம்மிடையே சிறந்த யான கலைஞர்கள் நடிகர்கள், தொழில்நுட்பக்காரர்கள் இருக்கின்றார்கள். வங்கத்துத் தாகூர் போன்ற சிறந்த நாடகங்களை எழுதி அதனை நெறிப்படுத்திதாமே பிரதான பாகத்தில் நடிக்கும் எனது அருமை நண்பர் வித்தியாரத்தினம் நவாலியூர் நடராசன் போன்ற மேதைகளிருக்கிறார்கள். ஆனால் எமக்கென்று - சிறப்பாகத் தமிழ்க் கலைக்கென்று எல்லா வசதிகளும் நிறைந்த ஒரு நாடகமன்று. தமிழ் நாடகஇயக்கம் இல்லாதிருக்கின்றது, ரஷ்யா பிரான்ஸ் இங்கிலாந்து போன்ற நாடுகளிலுள்ள நாடக இயக்கங்களைப்பார்த்திருக்கின்றேன். அவற்றில் நடந்த பல நாடகங்களைக் கண்டு களித்திருக்கிறேன்.

இலங்கைச் சங்கீத நாட்டிய சங்கம் போன்று மற்றைய சங்கங்களும், மன்றுகளும் ஒன்றுபட்டுழைத்தால் தமிழ் நாடக இயக்கம் வெற்றியளிப்பது திண்ணம். நல்ல தரமான தமிழ் நாடகங்களும் வெளிவரும். கலைஞர்களும் பொதுமக்களும் இதற்கு நல்லாதரவு நல்குவார்களாக.

இவ்வாறு மன்றுடியரங்குகள் லொக்டவுண் நும்பிளி மண்டபத்தில் சென்ற 9-ம் திகதிமேடையேற்றப்பட்டவித்தியாரத்தினம், நவாலியூர் நடராசன்எழுதி இலக்கியசந்திரோதயம், அழையாவிருந்து ஆகிய இரு நாடகங்களுக்கும் தலைமை தாங்கித் தமிழ் நாடக இலக்கத்தை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்திய திரு. ஆ. நவரத்தினம் எடுத்துக் கூறினார்.

திரு. நவரத்தினம் செயலாளர் திரு, க. மகாலிங்கத்துக்கும் வித்யாரத்தினம் சோ. நடராசனுக்கும் மன்றுடியரங்கிற்கும் தமதுநன்றியைத் தெரிவித்தார்.

தக்க வகையில் இத் துறைமுகம் அமைக்கப்படவிருக்கிறது. இந்துசமுத்திரத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பிறநாட்டு மீன்பிடி கலங்கள் தங்கி இத் துறைமுகத்தில் தங்கள் தேவைகளைக் கவனிக்கப்படும்.

ஆசிரியருக்குக் கடிதம்

## ஆதரவு பெற்றுள்ளது

இலங்கையில் வெளியாகும் தினசரிப் பத்திரிகைகளில் 'ஈழநாடு' தமிழ் மக்களின் ஆதரவைப்பெற்றுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

எந்த அரசியல் சார்புமின்றி தமிழினத்தின் நலனுக்காகவும், தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் எது நல்லதோ, அவற்றை வெளியிட்டு தமிழ் பண்பாடு ஆத்மீக உணர்வு, தமிழ் இலக்கியச் சுவை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து தரமான செய்திகளை மக்களுக்கு உடனுக்குடன் கொடுத்துதவும் இத் தமிழ் தினசரி பரந்துவிரிந்து வளர்ந்து தமிழினத்துக்குப் பல்லாண்டு தொண்டுசெய்ய வேண்டுமென பத்தாவதுஆண்டு நிறைவில்வாழ்த்துகின்றோம்,

சி. பாலசிங்கம்
செயலாளர்
மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கம்.

### மரண அறிவித்தல்

**வண. W. R. குமாரசாமி**

நல்லூர் சென் யேம்ஸ் ஆலயத்தின் குருவானவர் வண. W. R. குமாரசாமி காலமாகிவிட்டார். இவரின் மரண ஆராதனை மேற்குறிப்பிட்ட தேவாலயத்தில் 20-2-69 காலை 8 மணிக்கு நடைபெறும். அதன்பின் தேவாலயத்தின் சேமக்காலையில் நல்லடக்கம் நடைபெறும். 687

### மரண அறிவித்தல்

**அ. அப்புத்துரை**

முன்னாள் திருக்கேதீச்சரத்தில் தொண்டாற்றிய அ. அப்புத்துரை அவர்கள், பரிமளத்தின் கணவரும், மகேஸ்வரி. அருந்தவநாதன், சண்முகநாதனின் தகப்பனும், ராஜேந்திரத்தின் மாமனும் நேற்றுக் காலமானார். அவர்களின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை 20ந் தேதி 4 மணிக்கு 272, பருத்தித்துறை வீதி, நல்லூரில் நடைபெறும். 531

## கல்வி சுவீப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 09O001264 | 06P006608 |
| 04P002764 | 03P006641 |
| 05P014521 | 01P000833 |
| 05P014624 | 01Q007589 |
| 03Q008270 | 08Q012857 |
| 10Q005957 | 03Q004910 |
| 01Q012742 | 02Q013303 |
| 01R000407 | 10S011239 |
| 07R010428 | 03S004508 |
| 06R011042 | 06S006811 |
| 02R005343 | 04S002184 |
| 01R011459 | 01S008082 |
| 10R009068 | 07S000790 |
| 02R006180 | 01S006855 |
| 09R006544 | 01S003522 |
| 02S008067 | 05T010647 |
| 03S008105 | 03T010886 |
| 01S008086 | 04T012478 |
| 02T008623 | 09T005550 |
| 09T007023 | 03T011346 |
| 04T000164 | 01T003033 |
| 03U009630 | 03U004876 |
| 04U012741 | 01U007784 |
| 07U004693 | 01U000693 |
| 05V010608 | 08V011825 |
| 01V012195 | 10V005163 |
| 02V002047 | 04V010879 |
| 08V006480 | 04V006620 |
| 02V000498 | 03W013259 |
| 01W001275 | 01W005678 |
| 03W011382 | 04W003915 |
| 05W015392 | 05W014166 |
| 05W012562 | 03W000292 |
| 05W011102 | 08W006459 |
| 02W007874 | 06W003370 |
| 09W004934 | 03W011312 |
| 09X008820 | 07X003993 |
| 10X005409 | 06X008884 |
| 05X006476 | 01X005337 |
| 07X004309 | 10X002227 |
| 10X009699 | 02X015658 |
| 06X003075 | 04X013608 |
| 02X003881 | 03X003919 |
| 03Y002722 | 04Y000427 |
| 02Y012408 | 09Y006317 |
| 03Y002722 | 02Y012408 |
| 09Y002079 | 04Y000427 |
| 09Y006317 | 07Y014122 |
| 10Y004761 | 06Y006438 |
| 03Y006562 | 01Y009047 |
| 02Z015037 | 02Z005094 |
| 05Z001740 | 03Z011941 |
| 10Z001764 | 09Z015055 |

(இவை உறுதிப்படுத்தப்படவேண்டியவை. பரிசு பெறும் மிகுதி டிக்கட்டுகளின் விபரம் நாளை வெளிவரும்.)

(8-ம்கலத் தொடர்ச்சி)

என்னிலாரும் எனக்கினி
யாரில்லை
என்னிலும் மினியானொரு
வனுளன்
என்னுளே உயிர்ப்பாய்ப்
புறம்போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்
னம்பர் ஈசனே.
-- அப்பர்சுவாமிகள்.

என்று என் மகன் கூறியதும் என் கண்ணில் நீர் நிறைந்தது. அந்தச் சிறுவனை அப்படியே கட்டி அணைத்துக் கொண்டேன். மன்னிப்புக் கேட்டேன். அன்று முதல் என் கர்வம் நீங்கியது. எல்லோரும் சமம் என்ற நீதியை உணர்ந்தேன் என்று அப்பத்திரிகையில் 'மறக்க முடியாத நிகழ்ச்சி' என்று எழுதியிருந்தார்.

அந்தப் பேப்பர் பையன் சுந்தரராஜன் பிறகு என்ன ஆனான் தெரியுமா? 'முதலில் பலூன் ஊதி ஊதி தெருவில் விற்று, பள்ளிக்கூடச் சம்பளம் கட்டிப்படித்தேன். பலூன்களை ஊதியதில் நோய் வந்துவிட்டது. பின்னர் மாதம் ரூபா 25 சம்பளத்தில் காலையில் பேப்பரை வீடுகளில் போட்டு,பணம் வசூலித்துக் கொடுத்துவந்தேன். பின்னர் பேப்பர் சொந்தக்காரரின் கருணையால்கல்லூரியில் படிக்கவும் ஸ்காலர்ஷிப் கிடைத்தது. பின்னர் எம். எஸ். ஸி. படித்து, ஒரு பகுதி நேர ஆசிரியராக இருந்தபோது, திராவகப் பார்ட்டில் வெடித்துக் கண்களுக்கு ஆபத்து ஏற்பட்டது. கடைசியில் ஆண்டவனிடம் முறையிட்டேன் கண்பார்வை பெற்றேன் புறக்கண் மட்டுமல்ல அகத்திலும் புதிய பார்வை பெற்றேன். அதன் பலன்தான் இன்று நான் ஒரு விஞ்ஞானி. என்று எழுதுகிறார். ஆண்டவன் பெயரை அடிக்கடி நன்றியுடன் கூறுகிறார்.நான் ஒரு காலத்தில் 15 ரூபாய்க்காக மதுரைத் தெருவில் அலைந்தேன். இப்போது பதினையாயிரம் ரூபாய் என்னைத் தேடிவருகிறது'' என்று கூறுகிறார். ஒரு புத்தகம் எழுத முற்பணமாக இவ்வளவு பணம் அவருக்குக் கிடைத்ததாம்! அவருக்கு இப்போது வயது 33. அவரது இளம் மனைவி கௌரியும் ஒரு விஞ்ஞான ஆசிரியை.

0 0 0

இங்கு படிக்கும் மாணவரில் சிலர் ஈழநாடு' பத்திரிகையைத் தெருவில் அன்றாடம் கொண்டு விற்று, வீட்டில் தாயிடம் மூன்று அல்லது நான்கு ரூபாய் கொடுத்துவந்தனர். ஆனால் பிறகு ஏதோ 'வெட்கம்' வந்து, அவ்விதம் விற்பதை சிலர் நிறுத்திவிட்டதாக அறிந்தேன். மேற்குறித்த சுந்தரராஜனின் உண்மைக் கதையை அவர்களுக்காகவே இங்கு எழுதலானேன். இங்கும் சுந்தரராஜாக்கள் இல்லையா?

[7-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org